விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 25 செவ்வாய்க்கிழமை (10.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 265


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# இலங்கைக்கு மீண்டும் நவிபிள்ளை எச்சரிக்கை



*(ஜெனிவா)*, ஜெனிவா ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் கவுட்த்தில் பேசிய ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கையில் தன்னைச் சந்தித்த மனித உரிமை ஆர்வலர்கள், ஊடக வியலாளர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் இலங்கை அரசு கடும் பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் என மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார். *(19ஆம் பக்கம் பார்க்க)*

## இரகசிய தடுப்பு முகாம்களா? ஆதாரம் கேட்கிறார் கோத்தா



(கொழும்பு)

இலங்கையில் இரகசியத் தடுப்பு முகாம்கள் எங்கு இருக்கின்றன என்று கூறினால், அது தொடர்பில் விசாரணை நடத்தலாம் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவ்விவகாரம் தொடர் பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை அம்மையாரும் தன்னிடம் கேள்வி எழுப்பினார் என்றும் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் கோத்தபாய ராஜபக்ஷ குறிப்பிட் டுள்ளார்.

"இலங்கையில் இரகசிய தடுப்பு முகாம்கள் இருக்கின்றன என்ற கருத்து சர்வதேசத்திடம் இருக்கின்றதே" என்ற கேள்விக்குப்பதிலளித் துள்ள *(19ஆம் பக்கம் பார்க்க)*

## முன்னாள் போராளிகள் 107 பேர் நேற்று விடுதலை



(வவுனியா) புனர்வாழ்வு பயிற்சிகளை முடித்துக் கொண்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் 107 பேர் நேற்றுத் திங்கட்கிழமை வவுனியாவில் அரசாங்கத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 6 பேர் பெண்கள்.

விடுதலையாகியுள்ளவர்களில் பெரும்பான் மையானவரகள், *(19ஆம் பக்கம் பார்க்க)*

## ஐ.நா. உறுப்பு நாடுகளும் இலங்கை மீது அதிருப்தி


(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகள் இலங்கைக்கு எதிராக அதிருப்தியை வெளியிட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கையின் விஜயத்தின் போது, அவரை சந்தித்த சிலர் அச்சுறுத்தப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தன.

மனித உரிமை விவகாரங்கள் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## அமைச்சர் பீரிஸ் விளக்கம்

(கொழும்பு)



ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தனது இலங்கை விஜயத்தின்போது சுமத்தி யிருந்த சில குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வெளி விவகார அமைசசர் ஜீ.எல்.பீரிஸ், வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு நேற்று கொழும்பில் விளக்கமளித்துள்ளார்.

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூது வர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை அழைத்து *(19ஆம் பக்கம் பார்க்க)*

வடமாகாண சபைத் தேர்தல்-2013
யாழ். மாவட்டம்
இரத்தினலிங்கம் ஜெயசேகரன்
(வர்த்தக சங்கத் தலைவரும் சமூக சேவையாளரும்)



தமிழ் மக்களின் உரிமைகளை
ஜனநாயக முறையில் பெற்றிட
தமிழ் மக்களின் பொருளாதாரத்தினை
மேம்படுத்திட, தமிழ் மக்களின்
கலை, கலாசார விழுமியங்களை
பாதுகாத்திட, தமிழ் மக்களின்
தனித்துவத்தினை பேணிட
ஓர் அணியில் திரள்வோம்!
இலங்கை தமிழரசுக் கட்சி
X 6
(EC/4902)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## அவுஸ். உயர்ஸ்தானிகர் இன்று யாழ்.விஜயம்



வட்க்கு மாகாண சபைத் தேர்தல் நிலைவரம் தொடர்பாக ஆராயும் நோக்குடன் யாழ்ப்பாணத்திற்கு இன்று காலை வருகை தரும் அவுஸ்திரேலி யாவின் உயர் ஸ்தானிகா திருமதி அல்மா ரொபின் மூடி அம்மையார், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மற்றும் அக் கட்சியின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராகப் *(19ஆம் பக்கம் பார்க்க)*



ஐக்கிய தேசியக் கட்சி
தியாகராஜா
துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்



X 5

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நான் அவ்வாறு கூறவில்லை

## சரத் பொன்சேகா மறுப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமல்போனோர் என வடக்கில் எவரும் இல்லை, நட்டஈடு பெறுவதற் காகவே அவ்வாறு கூறப்படுகிறது எனத் தான் கூறவில்லை என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வலம்புரி ஆசிரியர் பீடத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா,

வலம்புரியில் நேற்று முன்தினம் (08ம் திகதி) முன்பக்கத்தில் வெளிவந்த செய் தியை மறுத்ததுடன் தான் அவ்வாறு கூற வில்லை எனவும் தெரிவித்துள்ளார். (ரு)

# தெரிவுக்குழுவில் இருந்து ஜாதிக ஹெல உறுமய விலகல்

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தம் மற்றும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் இருந்து ஜாதிக ஹெல உறுமய விலகியுள்ளது.

இனி வரும் காலங்களில் தமது கட்சி நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் கூட்டங் களில் பங்கேற்காது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் அவர் இதனை கூறி னார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

13ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங் களை ஏற்படுத்தவும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணவும் இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு உரிய முறையில் செயற்படாத காரணத்தினால் ஜாதிக ஹெல உறுமய அதில் இருந்து விலகியுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய தெரிவுக்குழு நடத் திய பல கூட்டங்களில் கலந்து கொண்டது. தேர்தலுக்கு முன்னர் பொலிஸ் மற்றும் காணி சம்பந்தமான அதிகாரங்களில் மாற்றங்களை தெரிவுக்குழு முன்வைக்க போவதில்லை.

அத்துடன் தெரிவுக்குழுவினால் எதிர்பார் த்த பலனை பெறமுடியாது. அதேவேளை தெரிவுக்குழுவில் இல்லாவிட்டாலும் நாடாளு மன்றத்தில் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக குரல் கொடுக் கப்படும்.

அதேபோல் நாடா ளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் இனவா தத்திற்கு எதிராக ஜாதிக ஹெல உறு மய தொடர்ந்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும் என்றார். (செ-11)

## மேர்வினுக்கு விசா வழங்க அமெரிக்க தூதரகம் மறுப்பு

மக்கள் விவகாரம் மற்றும் மக்கள் தொடர் புகள் அமைச்சர் மேர்வின் சில்வா அமெரிக் காவுக்கு பயணம் மேற்கொள்வதற்காக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் சமர்ப்பித்திருந்த விசா விண்ணப்பத்தை தூதரகம் நிராகரித்துள்ளது.

அமைச்சரின் மகன் மாலக்க சில்வா சமர்ப்பித்திருந்த விசா விண்ணப்பத்தையும் அமெரிக்க தூதரகம் நிராகரித்துள்ளது.

விசா பெறுவதற்காக சமர்ப்பிக்க வேண்டிய உரிய ஆவணங்களில் சில ஆவணங்கள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படாத காரணத் தினால் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது. (செ-11)


விற்பனைக்கு

மலிவான விலையில் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. தொகையாக எடுக் கும் சந்தர்ப்பத்தில் விலைக்கழிவு தரப் படும்.



தொடர்புகளுக்கு:
0778 422 357
0775 540 246 (391)


# வாள்வெட்டிற்கு இலக்கான குடும்பஸ்தர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டிற்குள்ளான நிலையில் குடும் பஸ்தர் ஒருவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சங்கானை நித்தியகாமம் எனும் இடத் தினைச் சேர்ந்த கே.குணதீபன் (வயது 34) எனும் குடும்பஸ்தரே வாள்வெட்டுக்கு இலக் கானவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் இரவு வேளை மானிப் பாயில் உள்ள வீடொன்றில் வாள்வெட்டிற் கிலக்கான நபரும் அவரது சக நண்பர்கள் உட்பட மூவரும் வேலை செய்துவிட்டு தமது வீடு நோக்கி சென்று கொண்டிருந்துள்ளனர்.

இதன்போது இவர்களினை பின் தொடர் ந்து வந்த இனந்தெரியாத நபர்கள் மூவர் குறித்த குடும்பஸ்தரினை வாளினால் வெட்டி யுள்ளனர்.

இதன்போது வாள் வெட்டிற்கிலக்கானவ ரின் இரு நண்பர்களும் சம்பவ இடத்தினை விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

படுகாயமடைந்த குடும்பஸ்தர் வீதியால் வந்தவர்களினால் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலி ஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

குறித்த குடும்பஸ்தரினை வாளினால் வெட்டியவர்கள் முகத்திற்கு கறுப்புத்துணி கட்டி வந்ததாகவும் வாள் வெட்டு சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொ ண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித் தனர். (செ-4)

# தேர்தல் துஷ்பிரயோகம்; 99 பேர் கைது

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர் பில் இதுவரையில் மூன்று மாகாணங்களில் 99 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள தாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர் பில் இதுவரையில் 113 முறைப்பாடுகள் பதி வாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் தேர்தல் பிரிவில் இந்த முறைப் பாடுகள் பதிவாகியுள்ளன.

இதேவேளை, கண்டி மாவட்டத்தின் இருவேறு பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு தேர்தல் அலுவலக ங்கள் மற்றும் ஆதர வாளர்களின் வீடுக ளின் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப் பட்டுள்ளதாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்த துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பிலான விசா ரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக கண்டி பிரதேசத்திற் குப் பொறுப்பான பொலிஸ் உயரதி காரி குறிப்பிட்டுள் ளார். (செ-11)

# ஆதரவாளர் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

ஐ.தே.கட்சியின் ஆதரவாளர் ஒருவர் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு மாளிகாவத்தையைச் சேர்ந்த ஐ.தே.கவின் ஆதரவாளரான ஆர்.அன்ரனி (வயது 30) என்பவர் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் 5 பேர் கொண்ட இனந்தெரியாத நபர்கள் பிரஸ்தாப நபரை விக்கெட்டினால் தலையில் பலமாக தாக்கியுள்ளதால் காயம் ஏற்பட்டதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)


தெல்லிப்பழை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
திருமஞ்ச திருவிழா



காலம் :
இன்று செவ்வாய்க்கிழமை
(10-09-2013) மாலை 6 மணி

அம்பாள் அடியார்கள்
அனைவரும்
வருகைதந்து
நல்லருள்
பெற்றுய்யுமாறு
அன்புடன்
வேண்டுகின்றோம்.

மஞ்ச திருவிழா
நிர்வாகசபை, உபயகாரர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(C-4677)


## மாகாண சபைத் தேர்தல் - 2013.09.21
## மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபைகள்

**வலிமையிழப்பொன்றுக்கு இலக்காகிய வாக்காளரொருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை அடையாளமிட்டுக் கொள்வதற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்குத் தேவையான சட்ட விதிகளை ஏற்பாடு செய்தல்.**

01. 2011ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 (2) ஆம் பிரிவிற்கமைய எதிர்வரும் தேர்தல்களின் போது முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ பார்வைப் பாதிப் பொன்றிற்கு அல்லது வேறேதேனும் உடல் ரீதியான வலிமை இழப்பொன்றிற்கு இலக்கான வாக்காளர் ஒருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வைத்து வாக்குச்சீட்டினை அடையாளமிட்டுக் கொள்வதற்காக உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்லத் தக்கவாறான புதிய சட்ட விதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

02. ஆயினும் அவ்வாறு உடனழைத்துச் செல்லும் அவ்வுதவியாளர் 18 வயதைப் பூர்த்தி செய்த ஒருவராக இருக்கவேண்டும் என்பதோடு அத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் அல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். அதேபோன்று அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவராகவோ அல்லது வாக்களிப்பு நிலையத்தின் முகவரொருவராகவோ செயற்படுகின்றவர் அல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் ஏதேனும் வலிமையிழப்பொன்றுக்குட்படாத வராகவும் இருத்தல் வேண்டும்.

03. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்காக உரிய சட்டத்தின் நான்காம் அட்டவணையினூடாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தகுதிச் சான்றிதழ் ஒன்றை உரிய வாக்களிப்பு நிலையத்தின் அலுவலர்களுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இத் தகுதிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுவதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களைத் தேர்தல்கள் நடாத்தப்படவுள்ள மாகாண சபைகளின் அதிகார எல்லைகளுக் குட்பட்ட கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். உரிய தகுதிச் சான்றிதழின் படிவத்தை தேர்தல்கள் திணைக்களத்தின் வெப் தளத்திலிருந்தும் (www.slelections.gov.lk) பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பார்வைக்குறைபாடுள்ள அல்லது வேறேதேனும் உடல் ரீதியான வலிமை இழப்பிற்குள்ளாகிய ஆள், கிராம அலுவலரிடமிருந்து விண்ணப்பப்படிவம் ஒன்றைப் பெற்று அதனை நிரப்பிக் கொடுத்து கிராம அலுவலரின் அத்தாட்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்பதோடு அதன்பின்னர் அச்சான்றிதழை அரசாங்க வைத்திய அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். வைத்திய அலுவலரினால் வாக்காளர் பரீட்சிக்கப்பட்டு அப்படிவத்தில் வாக்காளரின் தகைமை குறிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படும்.

05. வலிமையிழப்பிற்கு ஆளாகிய வாக்காளர் தனது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை, தேசிய அடையாள அட்டை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப் படுகின்ற ஏதேனும் ஒரு அடையாள அட்டை மற்றும் இத்தகுதிச் சான்றிதழ் என்பவற்றை எடுத்துக் கொண்டு உதவியாளரையும் உடனழைத்துக்கொண்டு வாக்களிப்பு நிலையத்திற்கு செல்லுதல் வேண்டும். வாக்களிப்பு நிலைய பணியாட் குழுவினால் வாக்காளரின் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து வாக்களிப்பு நிலையத்தின் வழமையான நடைமுறையைப் பின்பற்றி வாக்குச் சீட்டொன்று விநியோகிக்கப்படும் என்பதோடு அவ்வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளரோடு வாக்காளர் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரிடம் ஆற்றுப்படுத்தப்படுவார். உதவியாரும் தம்மோடு தேசிய அடையாள அட்டையை அல்லது வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் அடையாள அட்டை ஒன்றை எடுத்துச் செல்லல் இன்றியமையாததாகும்.

06. வாக்களிப்பு நிலையத்தில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் வாக்காளரின் தகுதிச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படும் என்பதோடு அழைத்துவருகின்ற ஆளிடமிருந்து தகுதிச் சான்றிதழ் 11 பகுதியில் காட்டப்பட்ட உரிய வெளிப்படுத்துகை பெறப்படும். அதைத்தொடர்ந்து வாக்களிப்பு பணியாட் குழுவினர் ஒருவரோடு வாக்காளரும் உதவியாளரும் வாக்களிப்புச் சிற்றறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் பணி யாட்குழுவின் மற்றோர் அங்கத்தினர் ஆகியோர் முன்னிலையில் வாக்குச் சீட்டு அடையாளமிடப்பட்டு வாக்குப் பெட்டிக்குள் இடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

07. மேற்குறித்த தகுதிச் சான்றிதழ் ஒன்று இல்லாமல் வாக்களிப்பு நிலையத்திற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்ல முடியாது என்பது கவனத்தில் கொள்ளப்படுகிறது. வாக்கு அடையாளமிட்டதன் பின்னர் உரிய தகுதிச் சான்றிதழ் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

08. எவ்வாறாயினும் உதவியாளர் ஒருவரோடு வருவதற்கு இயலாத வாக்காளர் ஒருவருக்கு தேவைப்படின், அதற்கு முந்திய வாக்கெடுப்புக்களில் போன்றே வாக்கெடுப்பு நிலைய அலுவலர் ஒருவரின் முன்னிலையில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரூடாக தனது வாக்குச் சீட்டினை அடையாளமிட்டுக்கொள்ள அவகாசம் உள்ளது என்பது அறிவிக்கப்படுகிறது.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய.
2013 செப்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி
பத்திரிகை அறிவித்தல் - 06

( C- 4678)

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்.

## வடமாகாண சபைத் தேர்தல் 2013
## (கிளிநொச்சி மாவட்டம்)

### இலங்கைத் தமிழரசுக் கட்சி



X 3

**டாக்டர் கந்தசாமி திருலோகமூர்த்தி**

தமிழினத்தின் தன்மானக் குரல்
கிளிநொச்சியின் உரிமைக் குரல்

(EC/5004)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


## மஹோற்சவம்

அரியாலைநயினை நாக கனகாம்பிகை அம்மன் ஆலயவருடாந்தமஹோற்சவம்நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைசப்பறத்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

இம்முறைஇவ்வாலயத்திற்கான புதிய தேரில் சுவாமிவீதிஉலா வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


## வடமாகாண சபைத் தேர்தல் - 2013

யாழ்.மாவட்டம்

### ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி



ஐக்கிய இலங்கைக்குள்
அதிகாரப் பகிர்வு கண்டிட
அபிவிருத்தியுடன்
சமாதானம் ஒன்றாய் பெற்றிட
உங்கள் தெரிவு

X 11

(EC/5003)

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினரும்
தென்மராட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும்

**குமாரு சர்வானந்தன் (சர்வா)**



## வடமாகாண சபைத் தேர்தல் 2013

### கிளிநொச்சி மாவட்டம்

எவர்க்கும் அஞ்சாமல்
எப்போதும் மக்களுக்காக
குரல் கொடுத்த....

**வீ.ஆனந்தசங்கரி**



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)

X 2

(EC/4999)



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

## வடமாகாண சபைத் தேர்தல் 2013

X 4



இழந்த வசந்தங்களை
மீள யாழ் மண்ணில் நிலை நிறுத்திட

அண்ணன்
**சிராஸ்**

(EC/5001)

உங்கள் குரல்! எனது செயல்...!
www.voiceofseeras.com



## வடக்கு மாகாணசபைத் தேர்தல்- 2013

யாழ்.மாவட்டம்



தமிழ் மண் காப்போம்!
தாயகம் மீட்போம்!!

**எம்.கே.சிவாஜிலிங்கம்**

9

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி X

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

(E-011)



## வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
## யாழ்ப்பாண மாவட்டம்



எமது போராட்டத்தில்
இதுவரை இழந்த இழப்புகளை
அர்த்தமுள்ள உரிமை
அரசியலாக்க வாக்களியுங்கள்

5

ஈழமக்கள்
ஜனநாயகக் கட்சி
(ஈ.பி.டி.பி.)



**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்**

(பருத்தித்துறை பிரதேச சபை
எதிர்க்கட்சித் தலைவர்)

(E-019)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

X 5





## வடக்கு மாகாணசபைத் தேர்தல் 2013

### யாழ்.மாவட்டம்

3

தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை
பெற்று வாழ,அபிவிருத்தி நோக்கி நகர,
நலிவுற்றோர் நலன்பெற
இலக்கம் 3 இற்கு வாக்களிப்போம்

**அரியகுட்டி பரஞ்சோதி**

(மாநகரசபை உறுப்பினர்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

(E-035)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி X 3

# இன்று ஒரு தகவல்

## எனக்குத் தெரியவில்லை

காட்டில் ஒரு முனிவர் இருந்தார். ஒரு நாள் அவரைத் தேடி நான்கு பேர் வந்தார்கள். "சுவாமி எங்களுக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகம்" என்றார்கள்.

"என்ன" என்று கேட்டார்.

"இந்த உலகத்தில் எவ்வளவோ காரியங்கள் நடக்கிறது. எது நியாயம்? எது அநியாயம்? என்று புரிந்து கொள்ள முடியவில்லை" என்றார்கள்.

"அதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது" என்றார் முனிவர். வந்தவர்கள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். முனிவர் பார்த்தார்.

"சரி... என்னுடன் புறப்படுங்கள்" என்றார். "எங்கே?" என்று கேட்டார்கள்.

"இப்பொழுது உங்கள் நான்கு பேரையும் ஒரு புஷ்பக விமானத்தில் அழைத்துக் கொண்டு போகப்போகிறேன். இந்த உலகத்தில் சர்வ சாதாரணமாக நடக்கக்கூடிய ஒரு காட்சியைக் காட்டப் போகி றேன். நீங்கள் பார்க்கப்போகும் அந்தக் கட்சி நியாயமா... அநியாயமா... என்று சொல்ல வேண்டும்.

நீங்கள் சரியான பதில் சொன்னால் புஷ்பக விமானத்தில் தொடர்ந்து பயணம் செய்யலாம். தவறான பதில் சொன்னால் இந்த புஷ்பக விமானம் உங்களைக் கீழே தள்ளிவிட்டு விடும்" என்றார்.

நான்கு பேருக்கும் பயம் தான் . இருந்தாலும் முனிவரோடு புறப்படச் சம்மதித்தார்கள். எல்லோரும் புறப்பட்டு ஒரு காட்டு வழியாகப் போய்க் கொண்டி ருக் கிறார்கள்.

அங்கே நடந்து கொண்டிருக்கும் ஒரு காட்சியைக் காட்டினார் முனிவர். புஷ்பக விமானத்தில் இருந்தவாறே எல்லோரும் கீழே குனிந்து பார்த்தார்கள்.

அங்கே ஒரு தாய்ப்புலி அப்போது தான் குட்டி போட்டிருந்தது. குட்டிகளை ஈன்ற உடனேயே பசிக்கு இரை தேடி அந்தப் பக்கமாக வந்தது. அதேநேரம் ஒரு தாய்மானும் அப்பொழுது தான் குட்டி போட்டி ருந்தது. அதுவும் இதேபோல் குட்டிகளை ஈன்றவுடனேயே பசிக்கு இரை தேடி அந்தப் பக்கமாக வந்தது.

புலி அந்த மானை அடித்துக் கொன்று விட்டது. அதைத் தானும் சாப்பிட்டு தனது குட்டிகளுக்கும் கொடுத்தது. இப்பொழுது அந்தப் புலிக் குட்டிகளின் முகத்தில் மகிழ்ச்சி. தாயை இழந்த அந்த மான் குட்டிகளின் முகத்தில் துக்கம்.

இப்பொழுது அந்த முனிவர் நான்கு பேரிடமும் கேட்கிறார். "நீங்கள் இங்கே பார்த்தீர்களே... இதில் எது நியாயம்? எது அநியாயம்? ஒவ்வொருவராகச் சொல்லுங்கள். உங்கள் பதில் சரியில்லை என்றால் இந்த விமானம் உங்களைக் கீழே தள்ளி விட்டு விடும். சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றார்.

முதலில் ஒருவன் "அந்தப் புலி செய்தது தான் சரி. அதனு டைய பசிக்கு மான்தான் ஆகாரம். தன்னுடைய பசிக்கு தானே இரை தேடிக் கொண்டது அவ்வளவு தான்" என்றான். அவ் வளவு தான்! அந்த விமானம் அவனைக் கீழே தள்ளிவிட்டது.

இரண்டாவது ஆள் சொன்னான் "புலி செய்தது பாவம். அந்தத் தாய்மான் என்ன பாவம் செய்தது? இப்பொழுது அந்தக் குட்டிகளுக்கு யார் ஆதரவு?" என்றான். அவ்வளவு தான்! அவனையும் கீழே தள்ளிவிட்டது விமானம்.

மூன்றாவது ஆள் வந்தான். அவன் சொன்னான். "இரண்டுமே நியாயம் தான். புலி இரை தேடியது இயற்கை. அதற்கு மான் இரையானதும் இயற்கை. அதனால் ஒன்றும் தப்பில்லை" என் றான். அவ்வளவு தான்! அவனையும் விமானம் கீழே தள்ளிவிட்டது.

இப்போது நான்காவது ஆள் வந்தான். "நீயாவது சொல். இதில் எது நியாயம்?" என்று கேட்டார் முனிவர்.

அவன் தெளிவாகப் பதில் சொன்னான். அதவாது, "எனக்குத் தெரியவில்லை" என்றான். அவன் கீழே விழாமல் சௌகரியமாகப் பயணம் செய்தான். ஆக, இதுதான் சரியான பதில் என்பதை முனிவர் உணர்த்தினார். இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென் றால்,

இந்த உலகத்தில் எவ்வளவோ காரியங்கள் நடக்கிறது. அதெல்லாம் ஏன் அப்படி நடக்கிறது என்பதற்கு எப்படிப்பட்ட பண்டிதராலும் பதில் சொல்ல முடியாது. தெரியாததை தெரியாது என்று ஒத்துக் கொண்டால் வாழ்க்கைப் பயணம் சுகமாக இருக்கும். அதனால் தேவையில்லாத விடயங்களைப் புரிந்து கொள்வதற்கு நேரத்தைச் செலவு பண்ணாதீர்கள். வாழ்க்கை யைக் குழப்பாதீர்கள்.

வாழ்க்கைக்குத் தேவையானதை மட்டும் புரிந்து கொள்ளுங் கள் அதுபோதும். இந்தக் காலத்தில் ஆள் ஒருவன் ஒரு பெரிய வரைத் தேடி வந்தான்.

ஐயா... ஒரு சந்தேகம்" என்றான்.

"உன்னுடைய சந்தேகம் என்ன?" என்றார். "பகுத்தறிவு என்றால் என்ன?, விதி என்றால் என்ன?" என்று கேட்டான்.

அதற்கு அவர், "இப்பொழுது உன்னுடைய வலது காலைத் தூக்கு" என்றார். தூக்கினான்.

"சரி... இப்பொழுது உனது இடது காலையும் தூக்கு" என்றார். தூக்கினான். பொத்தென்று கீழே விழுந்தான்.

பெரியவர் சொன்னார். உன்னால் ஒரு காலைத் தூக்கமுடிந்தது அதுதான் பகுத்தறிவு. இரண்டு கால்களையும் ஒரே சமயத்தில் தூக்கினால் அடிபடும் என்பதுதான் விதி என்று விளக்கம் கொடுத்தார்.

இவன் தன் விதியை நொந்தபடி இடுப்பைப் பிடித்துக் கொண்டே நடந்து போனான்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# நவநீதம்பிள்ளை குறிப்பிட்ட கருத்துக்கள் உண்மையானவை

## அஜித் பெரேரா எம்.பி. தெரிவிப்பு

நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களில் தபால் மூல வாக்கெடுப்பில் அரசாங்கம் வெற்றி பெறுமாயின் அரசாங்கம் செய்யும் மோசடிகளையும் ஆசிரியர்கள் மீதான தாக்குதல்களையும் விலை உயர்வுகளையும் அரச ஊழியர்கள் ஆதரிக்கின்றார்கள் என்றே அர்த்தமாகும்.

இவ்வாறு தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார். ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் எல்லாக் கருத்துக்களையும் நாம் ஆதரிக்கவில்லை. ஆனால், இலங்கை தொடர்பில் அவரின் கருத்தை முழுமையாக ஆதரிக்கின் றோம் எனவும் அவர் கூறினார்.

இராஜகிரியவில் நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார். அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் வேலைத் திட்டங்கள், அரச ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பில் இன்று எவரும் திருப்திப்படவில்லை. இன்று நிலவும் பொருளாதாரபிரச்சினைகளில் எவரும் வாழ முடியாதவொரு நிலைமையே காணப்படுகிறது. எனவே அரசாங்க ஊழியர்கள் தமது சரியான முடிவை எடுக்க வேண்டிய நேரம் வந்து விட்டது எனவும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தை ஆதரித்தால் அடுத்த சந்ததியினர் வீதிகளில் யாசகம் செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகும்.எனவே தற்போதைய பொளாதார சிக்கல், வாழ்வாதார பிரச்சினைகள், அடக்குமுறைக ளை ஆதரிப்பதா? அல்லது எதிர்கால விடிவை ஆதரிப்பதா? என்பதை அவர்களே முடிவெடுக்கட் டும்என்றார்.

யுத்தம் முடிவடைந்த காலத்தில் இருந்து நாடு சர்வாதிகாரப் போக்கிலேயே செயற்படுகின்றது. இன்று மக்களும் அதை நன்கு உணர்ந்து விட்டனர். மதங்களுக்கும் இனங்களுக்கும்இடையேபிரச்சினைகளைத் தூண்டி விட்டுதான்தோன்றித்தனமானதொரு ஆட்சியினை மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் செய்கின்றது என்பதை இன்று கண்முன்னாலேயே பார்க்க முடிகின்றது எனவும் தெரிவித்தார். (அ-2)

# தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளை மீள அழைப்பது குறித்து கவனம்

இந்தியாவில் வாழ்ந்து வரும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கை தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைப்பது தொடர்பில் இலங்கை- இந்தியா இடையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளன.

இலங்கை- இந்திய கூட்டு ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத்தில் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள 110 முகாம்களில் 68 ஆயிரத்து 58 இலங்கை தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் மேலும் 34 ஆயிரத்து 471 பேர் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் வசித்து வருகின்றனர்.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் 5 ஆயிரத்து 628 பேர் நாடு திரும்பியுள்ளதுடன் மேலும் 2 ஆயிரத்து 400 பேர் நாடு திரும்பவுள்ளனர் என மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜனக்க சுகததாச தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரலாயத்தின் உதவியுடன் நாடு திரும்பும் அகதிகளுக்கு இலவச விமானப் பயணச் சீட்டு வழங்கப்படுவதுடன் 25 ஆயிரம் ரூபா உதவி தொகையும் வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார். (அ-2)

# இடை விலகிய மாணவர்களுக்கான ஆங்கில கற்கை நெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம் Steps institute நிறுவனத்தால் நடத்தப்படும் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் மற்றும் நடைபெற்று முடிந்த க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் ஆங்கிலம் பயில விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள கனகரட்னம் மத்திய மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள இவ் ஆங்கில வகுப்பில் பங்கு கொள்ள விரும்புவோர் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள் ளது. இது தொடர்பான மேலதிக தகவல்களை 021222 4580, 021222 1395 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100-120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 100 |
| தக்காளி | 50 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 60 | 80 | 80 |
| கரட் | 60 | 100 | 100 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 30 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 100-140 | 140-180 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 140 | 120 |
| பாகற்காய் | 50 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 90 | 80 | 80 |
| லீக்ஸ் | 60 | 100 | 120 |
| பீற்றூட் | 20 | 40 | 40 |
| கறிமிளகாய் | 30 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 80 | 120 | 100 |
| போஞ்சி | 100 | 100 | 140 |
| கீரை - 1 பிடி | 25 | 30 | 20 |
| தேசிக்காய் | 350 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 35-45 |
| இராசவள்ளி | 60 | 120 | 120 |

# இராசி பலன்

10.09.2013
(ஆவணி 25, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 2.26 மணிவரை
சுவாதி முற்பகல் 8.42 மணிவரை
இராகுகாலம் 3.03-4.33 மணிவரை
சுபநேரம் 10.33-12.03 மணிவரை
சஷ்டி விரதம், ரிஷி பஞ்சமி

**மேடம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், விருந்தினர் வருகையுண்டு, போசன சுகமுண்டு.

**இடபம்** செய்தொழில் மேன்மையுண்டு, சிவனின் மைந்தரை வழிபட்டு மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உடல்நலம்

**மிதுனம்** நன்மைகள் நாடி வரும் நாள், பிரியமான சிலருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள், பெருமைகள் வந்து சேர கந்தனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகள் வழியில் பெருமையுண்டு.

**கடகம்** தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வாகன சுகமுண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும், தொழில் நன்மையுண்டு.

**சிங்கம்** உறவு-பகை பாராமல் உதவும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு, வெற்றிகள் குவிய கந்தனை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், சேமிப்பை உயர்த்த நடவடிக்கை எடுப்பீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**துலாம்** திட்டமிட்ட காரியமொன்று நடைபெறாவிட்டாலும் வேறு காரியமொன்று கைகூடலாம், உறவினர் நலம் கருதி சற்று அலைச்சல் ஏற்படலாம், சிந்தனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்** பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தாராளமாகச் செலவுகள் செய்து மகிழும் நாள், காரியங்களில் வெற்றிபெற கந்தனை வழிபட வேண்டிய நாள்,

**தனுசு** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திகரமானதாக இருக்கும், சான்றோர்களின் சந்திப்புண்டு, கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்** முன்னேற்றம் காண முயற்சி எடுக்கும் நாள், அலுவலக பணிகள் துரிதமாக நடைபெறும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தந்தைவழி உறவில் தனவரவுகள் வந்து சேரலாம்.

**மீனம்** கவலைகள் தீர கஜமுகனை வழிபட வேண்டிய நாள், வேலைச்சுமை அதிகரிக்கும், சேமிப்பில் சிறிது கரையலாம், தொழில் ரீதியான பயணங்களில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

வளவன்

# கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்தால் அதிகாரத்தை நிலை நாட்டும்

## கூட்டமைப்பு வேட்பாளர் சர்வேஸ்வரன் தெரிவிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணத்தின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால் அது மாகாணசபையின் அதிகாரத்தை நிலைநாட்டும் என்பது அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும். அதனைச் செய்வதற்கு நாங்கள் முயற்சிப்போம். அப்போது அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை நாங்கள் பார்த்துக் கொள்வோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இல.4 இல் போட்டியிடும் வேட்பாளர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் தனது தலைமையுரையில் தெரிவித்துள்ளார்.

புத்தூரில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள மூன்றாவது விடயமானது, இனப் பிரச்சினைக்கான நிரந்தர தீர்விற்கு அடிகோலும் விதமாக சிங்கள பௌத்த மேலாதிக்க அரசாங்கத்திடம் குவிந்து போயுள்ள அதிகாரங்களிலிருந்து தேவையானவற்றை வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு பகிர்ந்தளிப்பதனூடாக வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் பெருமளவில் தம்முடைய தலைவிதியைத் தாமே தீர்மானிக்கக் கூடிய அல்லது தமக்குரிய அரசியல், பொருளாதார, கலாசார தேவைகளைத் தாமே பாதுகாத்துக் கொள்ளக் கூடிய வகையில் தமக்கான ஒரு தன்னாட்சி அதிகாரத்தை ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும் என்பதாகும்.

இதன்படி மாகாணத்திற்கென ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் என ஒரு பட்டியல் இருக்கின்றது. மத்திய அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள்என ஒருபட்டியல் இருக்கின்றது. மாகாண அரசும் மத்திய அரசும் பேசித் தீர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் இன்னுமொரு சிறுபட்டியல் இருக்கின்றது. இப்படியாக மூன்று விதமான பட்டியல்களைபதின்மூன்றாவது திருத்தச் சட்டம் வெளிப்படுத்துகின்றது.

இதனடிப்படையில் கல்வி அதாவது (பாடசாலை கல்வி), சுகாதாரம், வைத்தியசாலைகள் என்பன மாகாண அரசின் கீழ் வரும்.

பொலிஸ் அதிகாரத்தில் ஒரு பகுதி மாகாணத்திற்குரியது.அதாவதுசாதாரணபொலிஸ் கான்ஸ்டபிளிலிருந்து ஏ.எஸ்.பி. என்று சொல்லக் கூடிய உதவிக் காவல்துறை அத்தியட்சகர் வரை மாகாண சபையின் வரம்பிற்குட்பட்டவை. இந்தப் பதவிகளுக்கு மாகாண சபை ஆளெடுப்புச் செய்யலாம். பதவியுயர்வு வழங்கலாம். அதற்கு மேல் அதாவது அத்தியட்சகர் பதவியிலிருந்து பொலிஸ்மாஅதிபர் வரைமத்திய அரசாங்கத்திற்குரியவை.

மாகாணத்திற்குரிய அரசு நிலங்களை மாகாணம் தனது மாகாண அபிவிருத்திக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். மத்திய அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட நிகழ்ச்சிநிரல் அதனுடைய அதிகாரங்களுக்குபட்ட தேவைகளுக்காக மாகாணத்திடம் நிலத்தைக் கேட்கும் போது மாகாண அரசாங்கம் அவற்றைக் கொடுக்க வேண்டும். மாகாணத்திற்குபட்ட விவசாயம், போக்குவரத்து மாகாணத்தினுள் தொடங்கி மாகாணத்திற்குள் முடியும் வீதிகள், அதனுடைய பராமரிப்புக்கள், விவசாயம், நீர்ப்பாசனம் உள்ளிட்ட முப்பத்தேழு விடயங்கள் மாகாணத்திற்கென பகிரப்பட்ட அதிகாரங்களென பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் குறிப்பிடுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணத்தின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால் அது அந்த அதிகாரத்தை நிலைநாட்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# எதிர்ப்பரசியலுக்கான ஆதரவு எதையும் தரப்போவதில்லை

## ஐ.ம.சு.மு.வேட்பாளர் அங்கஜன் தெரிவிப்பு



மக்களை உணர்ச்சி வசப்படுத்தி வாக்கு வங்கிகளாக்கியும், நாம் மக்களுக்கு உரிமைகளை பெற்றுக் கொடுப்போம் என்று போலி வாக்குறுதி களை தேர்தல் காலங்களில் சொல்லிச் சொல்லியே எம் மக்களை பலர் ஏமாற்றி விட்டனர். இவர்கள் மக்களை ஏமாற்றி தமது அரசியல் இருப்பை உறுதி செய்தனரே தவிர, மக்களது வாழ்வுக்காக எதையுமே அவர்களால் பெற்றுக் கொடுக்க முடியவில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வட மாகாண சபைத் தேர்தல் வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில்புத்தூர்கலைமதி கிராமத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உங்களுக்கு தெரியும் வருகின்ற மாகாண சபைத் தேர்தல் மிகவும் முக்கியமானது. ஏனென்றால் 27 வருடங்களுக்கு பின்னதாகவும் முதல் முறையாகவும் எல்லோரும் மாகாண சபைக்காக வாக்களிக்கப் போகின்றோம். இந்த வாய்ப்பை எங்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தந்திருக்கிறார். இதற்கு முன்னர் யாராவது இத்தகைய வாய்ப்பை தந்தார்களா? எந்த அரசாங்கங்களும் எந்த ஆட்சியும் தராத இந்த வாய்ப்பை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் வழங்கியிருக்கிறது.

இந்த தேர்தலின் ஊடாக எங்களுக்கு சுயநிர்ணயம் கிடைக்கப் போகின்றது. எங்களுடைய மக்களை நாமே ஆட்சி செய்யலாம். எந்த அமைச்சரும் கொழும்பில் இருந்து வந்து உதவிகளை செய்ய வேண்டியிருக்காது. நீங்களும் அவர்களைத் தேடி அங்கும் செல்ல வேண்டியிருக்காது. ஏனென்றால் உங்களது மாகாண சபைக்கான அமைச்சர்களே உங்களுக்கான தேவைகளையும் அபிவிருத்திகளையும் செய்து தருவார்கள். இந்த வாய்ப்பை மக்களுக்காக மாகாண சபைக் கட்டமைப்பு தந்திருக்கிறது.

இதுவரை காலமும் எந்த விதமான பயனும் இல்லாத எதிர்ப்பரசியலுக்கு ஆதரவளித்து நாம் எதை சாதித்தோம்? எவற்றை பெற்றோம்? வெறுமனே ஏமாற்றங்கள் மட்டுமேகிடைத்தன.நாம் மக்களை ஏமாற்றும் அரசியலுக்கு எதிரானவர்கள். மக்களுக்காகவே அரசு, அரசுக்காக மக்கள் இல்லை என்பதை கொள்கையாக கொண்டவர்கள்.

மக்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து அபிவிருத்திகளும் எவ்வித தடைகளும் இன்றி அவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

அந்த உறுதியை கடந்த காலங்களில் குடாநாட்டு மக்களுக்கும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் என்னால் பெற்றுக் கொடுக்கப்பட்ட வேலை வாய்ப்புக்கள், வாழ்வாதார நலத்திட்ட உதவிகள், பிரதேச அபிவிருத்திகள் போன்றவை அனைத்தும் வெளிப்படுத்தி நிற்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (அ)






# நெல்லியடி நாவலர் மடம் வீதியை புனரமைக்குக

(கரணவாய்)

யாழ்ப்பாணம்- பருத்தித்துறை பிரதான வீதியுடன் இணையும் நெல்லியடி நாவலர் மடம் வீதி, புனரமைப்பு எதுவுமின்றி தற்போது பெய்துள்ள மழையினால் சேறும் சகதியுமாக சில பகுதிகளில் வெள்ளம் தேங்கிக் காணப்படுவதாகவும் இவ்வீதியைப் பயன்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கால்நடை வைத்தியசாலை மற்றும் கால்நடை கூட்டுறவு சங்கம் என்பன அமைந்துள்ள இவ்வீதியைப் பலர் பயன்படுத்தி வருவதாகவும் மழை காலம் ஆரம்பித்தால் இவ்வீதியின் நிலை மோசமடைந்து விடும் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதுதொடர்பில் பிரதேச சபை, பிரதேச செயலகம் என்பவை உட்பட பல இடங்களில் முறையிட்டுள்ள் போதும் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எணவே, இவ்விடயத்தில் உரியவர்கள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-5-60)







# 15 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருட்டு!

## சந்தேக நபர்கள் கைது

(சாவகச்சேரி)

**சாவகச்சேரி உப்புக்கேணிப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து 15 இலட்சம் ரூபா பெறு மதியான தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வீட்டு உரிமையாளர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

இதையடுத்து குறித்த கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையதான சந்தேக நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளில் சாவகச்சேரி பொலிஸார் இறங்கியுள்ளனர்.

குறித்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இக் கொள்ளைச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையில் இடம்பெற்றுள்ளது. மேற்படி சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த சனிக்கிழமை உறவினர் ஒருவரின் புதுவீடு புகுவிழாவிற்கு சென்ற பிரஸ்தாப குடும்பத்தினர், அன்றைய தினம் இரவு தாமதமாகவே நித்திரைக்குச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் மறுநாள் காலையில் எழுந்து பார்த்த பொழுது வீட்டின் கதவுகள் திறந்து இருந்துள்ளதுடன், வீட்டில் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து குறித்த விடயம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது. இதனடிப்படையில் சந்தேக நபர்கள் சிலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வீட்டின் ஜன்னல் கம்பிகளை உடைத்தே திருடர்கள் உள்நுழைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் உறைகள், பெட்டிகள் என்பன வீட்டின் முன்பகுதியில் வீசப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5-29)

## கலந்துரையாடல்

(துனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.கிளைக் காரியாலயத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட இளைஞர் சேவை சம்மேளனத்தின் தலைவர் லக்ஸன் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில் 15 பிரதேச செயலகங்களிலுமுள்ள இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களும் 15 பிரதேச சம்மேளன உறுப்பிணர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் இளைஞர் சேவை மன்றத்தின் தொண்டர் வேலைத் திட்டம் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (அ-9-37)

## வல்லிபுர ஆழ்வார் மஹோற்சவம்

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, உற்சவம் தொடர்ச்சியாக 17 நாட்கள் நடைபெற்று வருகின்றது.

இதன்படி எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை சமுத்திர தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கேணித்தீர்த்தமும் இடம்பெறவுள்ளது. அத்துடன் அடியார்களின் நலன் கருதி உற்சவகாலங்களில் விசேட போக்குவரத்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (அ-7-10-19)

## மிருசுவில் சந்தியில் விபத்து; ஒருவருக்கு தலையில் படுகாயம்!

(மிருசுவில்)

ஏ-9 வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்தை துவிச்சக்கரவண்டியொன்றும் மோட்டார் சைக்கிளும் ஒரே நேரத்தில் கடந்து செல்லமுயன்ற வேளை மோதுண்டதில் விபத்துக்குள்ளாகின.

இவ்விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதுடன், மற்றொருவர் சாதாரண காயங்களுக்குமுள்ளானார்.

ஏ-9 வீதி மிருசுவில் சந்திக்கு அண்மையாக நேற்றுமுற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் சதாசிவம் திவாகரன் (வயது 36) என்பவரே படுகாயமடைந்துள்ளதோடு, துவிச்சக்கரவண்டியில் பயணித்த துரையப்பா சண்முகம் (வயது 62) என்பவரும் சாதாரண காயங்களுக்கு உள்ளானார்.

இதேவேளை, மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து பயணித்த படுகாயமடைந்த நபர் அதிக நேரம் வீதியில் இரத்த வெள்ளத்திலேயே கிடந்துள்ள பரிதாபமும் நேர்ந்துள்ளது.

மேற்படி விபத்துச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, மிருசுவில் பகுதியிலிருந்து கொடிகாமம் நோக்கி மோட்டார் சைக்கிளில் ஒன்றாக பயணித்த இருவரும் அதே திசையில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த ஒருவரும் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்தை சமாந்தரமாக ஒரே நேரத்தில் கடந்து செல்ல முற்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கரவண்டியும் மோதுண்டு விபத்திற்குள்ளாகின.

இதனால் மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் இருந்து பயணித்தவர் தூக்கி வீசப்பட்டு அவர் தலைக்கவசம் அணியாமையினால் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு வீதியில் இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார்.

இதையடுத்து அவருடன் பயணித்த மற்றயவர் படுகாயமடைந்தவரை காப்பாற்ற உதவி கோரிய போதும் அங்கு கூடி நின்றவர்கள், காயப்பட்டவர் இறந்துவிட்டதாக கருதியதால் அவரை நெருங்க மறுத்தனர்.

இப் பதற்றத்தில் அவருடன் பயணித்தவரும் அவ்விடத்திலிருந்து விலகிச் சென்றுள்ளார்.

எனினும் அங்கு வந்த கருணை உள்ளம் படைத்த முச்சக்கரவண்டி சாரதிகள் பலர் ஒன்றுசேர்ந்து படுகாயமடைந்தவரை மிருசுவில் அரசினர் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். பின்னர் அவர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

துவிச்சக்கர வண்டியில் வந்தவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதனையடுத்து விபத்து இடம்பெற்ற பகுதிக்கு வந்த கொடிகாமப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதோடு, மோட்டார் சைக்கிளை செலுத்திவந்தவர் குறித்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-5-85)

## இலவச பயிற்சி பட்டறை

(யாழ்ப்பாணம்)

ஐ.நா. அபிவிருத்தித்திட்ட அனுசரணையுடன் எம்.சி.எஸ். தகவல் தொழில்நுட்ப வளாகம், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கு கணனி வலையமைப்பு, இணைய வடிவமைப்பு, மல்ரிமீடியா ஆகிய துறைகளில் இலவச பயிற்சிப் பட்டறையை நடத்தவுள்ளது.

இப் பயிற்சி நெறியை பயில விரும்பும் மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் அமைந்துள்ள எம்.சி.எஸ். தகவல் தொழில்நுட்ப வளாகத்திலோ அல்லது 0772395895 என்னும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ 7 நாட்களுக்குள் பதிவுகளை மேற்கொள்ளலாம். (அ-7)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(தும்பளை)

தேர்தல் திணைக்களத்தினால் பிரதேச செயலக பிரிவு ரீதியாக நடத்தப்பட்டுவரும் தேர்தல் விழிப்புணர்வு கருத்தரங்கு நிகழ்வுகள், இன்று செவ்வாய்க்கிழமை மருதங்கேணி பிரதேச செயலப் பிரிவின் இரு இடங்களில் நடைபெறவுள்ளன.

இதன்படி ஜே/418 முதல் ஜே/424 வரையிலான கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதான கருத்தரங்கு முற்பகல் 10 மணிக்கு குடத்தனை கிறிஸ்து நற்தூது பணிமனையிலும் ஜே/425 முதல் ஜே/435 வரையான கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதான கருத்தரங்கு பிற்பகல் 2 மணிக்கு தாளையடி றோ.க.த.க. பாடசாலையிலும் இடம்பெறவுள்ளன. (அ-5-19)

# சிரியாமீது தாக்குதல் நடத்த தடயத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றது அமெரிக்கா

**ஏற்கனவே திட்டமிட்டதைவிட அதிக தீவிரமாக சிரியாவின்மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக லொஸ் ஏஞ்சலீஸ் டைம்ஸ் நாளிதழ் தெரிவித்துள்ளது. மூன்று நாட்களுக்கு தாக்குதல் நடத்த இராணுவத் தலைமை திட்டமிட்டுள்ளதாகவும் அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது.**

இது குறித்து நேற்று முன்தினம் அந் நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப் பட்டுள்ளதாவது,

சிரியாவில் முன்கூட்டியே முடிவு செய்யப் பட்ட இலக்குகளில் ஏவுகணைகளைக் கொண்டு சரமாரியாகத் தாக்கவும், இத்தாக்கு தலில் தப்பிய இலக்குகளின்மீது உடனடியாக மறுதாக்குதல் தொடுக்கவும் இராணுவத் தலைமையகமான பென்டகன் முடிவு செய்து ள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆரம்பத்தில் தேர்வு செய்து வைத்திருந்த 50 இலக்குகளைத் தவிர, மேலும் பல புதிய இலக்குகளைத் தேர்வு செய்யுமாறு ஜனாதிபதி பதி மாளிகை கேட்டுள்ளது.

தற்போது மத்திய தரைக்கடல் பகுதியில் முகாமிட்டுள்ள ஏவுகணை அழிப்புக் கப்பல் களின் உதவியுடன், தாக்குதல் விமானங் கள் மூலம், ஏவுகணைகளைக் கொண்டும் சிரியா விமானப்படையை அழிக்க பென்ட கன் திட்டமிட்டு வருகிறது.

வேகமாகச் செல்லக்கூடிய ஒரு குரூஸர் வகைப் போர்க்கப்பல், மூன்று தாக்குதல் கப்பல்களுடன் யு.எஸ்.எஸ் நிமிட்ஸ் விமா னம் தாங்கிக் கப்பல் ஒன்றும் சிரியா மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்த வசதியாக செங்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சிரியாமீது பலமுறை சரமாரித் தாக்குதல் நடைபெறும் என்றும் மூன்று நாட்களுக்குள் இலக்குகள் அழிக்கப்பட்டுவிடும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்**

சிரியாமீது அமெரிக்கா இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு எதிராக அமெரிக்கா வில் நூற்றுக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர்.

வெள்ளை மாளிகை முன் நேற்று முன் தினம் திரண்ட அவர்கள், போருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

**வீடியோ ஆதாரங்கள் வெளியீடு**

சிரிய ஜனாதிபதி அல் ஆசாத்தின் படை கள் நடத்தியதாகக் கூறப்படும் இரசாயனத் தாக்குதல் காட்சிகள் இடம்பெற்றுள்ள 13 வீடியோக்களை அமெரிக்க உளவுத்துறை வெளியிட்டுள்ளது. சிரியா மீது இராணுவத் தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்க நாடாளு மன்றத்தின் ஒப்புதலை ஜனாதிபதி ஒபாமா கோரவிருக்கும் நிலையில், அதற்கு ஆதரவு திரட்டும் வகையில் இந்த வீடியோ காட்சிகள் வெளியிடப்பட்டன.

தொடக்கத்தில் அமெரிக்க நாடாளுமன்ற




உறுப்பினர்களுக்கு காட்டப்பட்ட இந்த வீடியோக்கள், பொதுமக்களின் ஆதரவுக்காக சி.என்.என் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப் பானது.

**ஐரோப்பிய யூனியன் நிபந்தனை**

இதேவேளை சிரியா விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகளின் ஆதரவை திரட்ட அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி சுற்றுப்பயணம் மேற்கொண்டுள் ளதோடு ஐரோப்பிய யூனியன் அமைச்சர் களையும் சந்தித்து பேசி வருகிறார்.

இதற்கிடையில் ஐரோப்பிய யூனியனில் இடம் பெற்றுள்ள 28 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டுள் ளனர். அதில் சிரியா அரசாங்கம் கடந்த 21ஆம் திகதி இரசாயன ஆயுத தாக்குதல் நடத்தியமை கண்டனத்துக்குரியது என்றும், ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கை வரும் வரையில் அமெரிக்கா காத்திருக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத் துள்ளது. இந்தத் தகவலை ஐரோப்பிய யூனியன் வெளியுறவு கொள்கை தலைவர் கேத்தரின் ஆஷ்டன் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறும்போது,

'இந்தக் குற்றச்செயல் ஏற்புடையதல்ல. விதிவிலக்கு அளிக்க முடியாது. அதே நேரத்தில் சிரியா விவகாரத்தை ஐ.நா. சபை மூலம் கையாள வேண்டும்' என்றார்.

**அறிக்கை எப்போது?**

சிரியாவில் ஐ.நா. நிபுணர்கள் குழு சோதனை நடத்தி சேகரித்த பொருட்கள், தடயங்களைத் தீவிரமாக ஆய்வு செய்து வருகின்றனர். இந்த அறிக்கை இவ்வார இறுதியில் தாக்கல் செய்யப்படும். அப்போது இரசாயன ஆயுதம் பயன்படுத்தப்பட்டதா? என்ற விபரம் தெரியவரும்.

இது தொடர்பாக பிரான்ஸ் ஜனாதிபதி ஹோலண்டே கருத்து தெரிவிக்கையில்,

அமெரிக்க பாராளுமன்றத்தில் எதிர்வரும் வியாழன் அல்லது வெள்ளிக்கிழமை வாக் கெடுப்பு நடைபெறலாம். ஆகவே ஐ.நா. நிபுணர்களின் அறிக்கையும் வார இறுதி யில் தாக்கல் செய்யப்பட்டு விடும். அதன் பின்பு முடிவு செய்யப்படும்' என்றார்.

**போப் ஆண்டவர் பிரார்த்தனை**

சிரியா மீது இராணுவ தாக்குதல் நடத்த வேண்டாம் என போப் ஆண்டவர் பிரான் சிஸ் கடந்த வாரம் உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன் சிரியாவில் அமைதி நிலவ பிரார்த்தனை நடத்தும்படியும் கேட்டுக் கொண்டார்.

அதன்படி வத்திக்கான் நகரிலுள்ள சென் பீட்டர்ஸ் சதுக்கத்தில் சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது. 5 மணிநேரம் நீடித்த இந்த பிரார்த்தனையில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

அதில் போப் ஆண்டவர் பிரான்சிஸ் உரையாற்றுகையில், 'வன்முறை மற்றும் போர் மரணத்தை விளைவிக்கும். அவை சாவையே பேசும். வன்முறை, போர் இரண்டும் மரண மொழி' என்று குறிப் பிட்டார். (அ-2)

# தினமும் இரண்டு கிலோகிராம் ஹெரோயின் பாவிக்கப்படுகிறது

இலங்கையில் ஹெரோயின் போதைப் பொருளை பயன்படுத்தும் நபர்கள் தினமும் இரண்டு கிலோகிராம் ஹெரோயினைப் பயன் படுத்துவதாக அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள சுமார் 45 ஆயிரம் பேர் தினமும் அதனைப் பயன்படுத்தி வருகின் றனர் என கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் லீசா டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில்,

நாட்டில் போதைப்பொருளை பயன்படுத் தும் நபர்கள் வருடாந்தம் 763 கிலோகிராம் ஹெரோயினைப் பயன்படுத்துகின்றனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் மதிப்பீட்டின் பிரகாரம் ஒரு கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருளின் சில்லறை விலை 35 இலட்சம் ரூபாவாகும்.

இதனடிப்படையில் போதைப்பொருளு க்கு அடிமையானவர்கள் ஒரு வருடத்தில் 2 ஆயிரத்து 670 கோடி ரூபாவை அதற்காக செலவிடுகின்றனர்.

அண்மையில் இலங்கையில் கைப்பற்றப் பட்ட 260 கிலோகிராம் போதைப்பொருள் 4 மாதத் திற்கு மட்டுமே போதுமானது என்றார். (அ–2)

# ஹெரோயின் கடத்திய குற்றச்சாட்டில் பாக்.பிரஜையை கைது செய்ய உத்தரவு

260 கிலோகிராம் பிரவுண் சுகர் ரக ஹெரோ யின் போதைப்பொருளை இலங்கைக்கு அனுப்பியதாகக் கூறப்படும் பாகிஸ்தான் பிரஜையைக் கைது செய்வதற்காக கொழும்பு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் சர்வதேச பொலிஸார் ஊடாக பிடியாணை பிறப்பித் துள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரி வினர் விடுத்த கோரிக்கையை அடுத்து மாளி காகந்த மேலதிக நீதவான் ரஷாந்த கொடவெல இந்தப் பிடியாணையை பிறப்பித்துள்ளார்.

அதேவேளை இந்தப்போதைப்பொருள் கடத்தல் சம்பவம் தொடர்பாக கைது செய் யப்பட்டுள்ள இரண்டு சந்தேக நபர்களை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறி யலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள் ளார்.

பாகிஸ்தான் பிரஜை ஒருவரும் மாளிகா வத்தை பகுதியைச் சேர்ந்த ஒருவரும் இவ் வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள னர். அதேவேளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்பட்ட மற்றுமொரு சந்தேகநபர் விடுதலை செய்யப்பட்டார்.

இதனிடையே சம்பவம் தொடர்பில் தேடப் பட்டு வரும் பாகிஸ்தான் பிரஜை கடந்த ஓக ஸ்ட் மாதம் வரை இலங்கையில் தங்கியி ருந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

போதைப்பொருளுக்குரிய இலங்கையின் உரிமையாளர் யார் என்பதைக் கண்டறிய தொடர்ந்தும் விசாரணைகள் நடத்தப்படுவ தாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.


கொழும்பு ஒருகொடவத்தை பகுதியில் கடந்த ஓகஸ்ட் 30ஆம் திகதி 260 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப் பட்டது. இது தெற்காசியாவில் கண்டுபிடிக் கப்பட்ட மிகப்பெரிய தொகை என கருதப் படுவதுடன் அதன் பெறுமதி 250 கோடி ரூபாவுக்கும் மேல் எனத் தெரிவிக்கப்படுகி றது. (அ–2)






# ஆமையும் அழகிய பெண்ணும்!

## பஞ்சதந்திரக் கதைகள்



ஒருநாட்டில் மன்னன் குடிமக்களை மட்டுமல்ல, விலங்குகளையும் தன் கட்டுப்பாட்டில் வைத்து இருந்தான். அவனுக்கு எக்பன்யான் என்ற மகன் இருந்தான். அவன் ஒரு நிலையில்லாத சிந்தனை உள்ளவன். அவனுக்கு நிறைய மனைவிகள் இருந்தும் யாரையும் விரும்பாமலும் நேசிக்காமலும் இருந்தான். அதனால் மன்னன், மகனின் கண்ணில் படும் அழகான பெண்களையெல்லாம் அவனுக்கு மனைவிகளாக்கி வைத்தான். பெண்ணின் தாயோ, தந்தையோ சம்மதிக்கவில்லையென்றால் அவர்களைக் கொன்றுவிடும் துர்க்குணம் கொண்டிருந்தான்.

அந்நாட்டில் மிகவும் புத்திசாலியான ஆமை ஒன்று இருந்தது. அந்த ஆமையின் மனைவியும், மகளும் மிகவும் அழகானவர்கள். மகள் இளவரசன் கண்ணில் பட்டுவிடாமல் இருக்க ஆமை, அவளைப் புதர்களில் ஒளிந்து இருக்க வைத்தது. ஒருநாள் அந்த ஆமை, உணவுக்காக தனது வயலில் வேலை செய்வதற்காகத் தன்மனைவியுடன் சென்றிருந்தது.

அந்த நேரத்தில் பறவைகளை வேட்டையாடிக் கொண்டிருந்த இளவரசன் ஒருபறவையை நோக்கி அம்பைத்தொடுத்தான். அந்தப் பறவை பொத்தென்று புதர் அருகில் விழுந்தது. ஆமையின் மகள் அதைப் பார்த்து கலக்கம் அடைந்தாள். பறவையோ அவளின் அதீத அழகை ரசித்தபடி இருந்தது. அதை அவள் எடுத்து அன்புடன் தடவிக் கொண்டிருந்தாள். அப்போது பறவையை தேடி புதரின் அருகில் படைவீரன் ஒருவன், அழகின் உருவமாக இருந்த ஆமைப்பெண்ணைப் பார்த்து வியந்து போனான். அவன் ஓடிப் போய் இளவரசனிடம், அழகான பெண் ஒருத்தி புதருக்குள் ஒளிந்து இருக்கும் விடயத்தைச் சொல்லி விட்டான்.

அதைக்கேட்ட இளவரசன் விரைந்து வந்து புதர் அருகில் சென்றான். அந்த அழகிய ஆமைப்பெண்ணைப் பார்த்ததும் அவனது கண்கள் விரிந்தன.அவன் வாழ்நாளில் அத்தகைய அழகிய பெண்ணை பார்த்ததே இல்லை. அவளையே வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருந்தான்.

அடுத்த கணமே அந்தப் பெண்ணைத் தனது மனைவியாக்கிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டான். அந்த அழகியும் அவனை உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். பிறகு அவளுடன் பேச்சுக்கொடுத்தான். அவளும் அவனுடன் பேச ஆரம்பித்தாள். வெகுநேரம் அந்தப் பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்த அவன், அவள் அவனை ஏற்றுக்கொண்டு மனைவியாக்கத் தயார் என்று சொல்லும் வரை பேசிக்கொண்டிருந்தான். பின்னர் அரன்மனைக்குத் திரும்பினான். மன்னரான தனது தந்தையிடம் அந்த ஆமையின் மகளைச் சந்தித்தது பற்றிக் கூறாமல் மறைத்து விட்டான்.

மறுநாள் காலையில் ஆறுதுணித் துண்டுகள், முன்னூறு மரத்துண்டுகளைப் பரிசாக ஆமையின் வீட்டுக்கு அனுப்பிவைத்தான். அன்று பிற்பகலில், ஆமையின்வீட்டுக்குச் சென்ற இளவரசன் ஆமையிடம், தான் அந்தப் பெண்ணைமணக்க விரும்புவதாகவும் அவளுக்காக எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் காத்திருக்கத் தயார் என்றும் கூறினான். ஆனால், ஆமை மிகவும் பயந்தது. மன்னனுக்கு இந்த விடயம்தெரிந்தால் தன்னை மட்டு மல்ல, மனைவி, மகள் என எல்லோரையும் கொன்று விடுவான் என்று பயத்தின் உச்சியில் கூறியது.

ஆனால், இளவரசனான மன்னனின், மகனோ ஆமையிடம், அப்படி ஏதும் நடக்காமல்தான் பார்த்துக்கொள்வதாக சொல்லிச் சமாளித்தான். ஆமையும் அவனது வார்த்தையை நம்பியது. இளவரசனோ தன் தாயிடம் சென்று, ஆமை அழகி பற்றிக் கூறினான். அவருக்கும் அரசரின் பிடிவாத குணம்பற்றி வெறுப்பு இருந்து. அவர், அரசருக்குத் தெரியாது அந்த ஆமைக்குடும்பத்தின் வீட்டுக்குச் சென்று அந்தப்பெண்ணை பார்க்க முடிவுசெய்தார். உடை, உணவு வகைகள் மற்றும் தங்கநகைகளை எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

தன் மகனான இளவரசன் திருமணம் செய்து கொள்ளவிரும்பிய ஆமையின் மகளைப் பார்த்தார். தான் கொண்டு வந்திருந்த பொருட்களையும் கூடவே ஆலிவ் எண்ணையையும் அந்த அழகிக்குப் பரிசளித்தார். அந்த ஆமையிடம்என் மகனே, உன் மகளை மணந்துகொள்வான், வேறுயாருக்கும் அவளை மணம் பேச வேண்டாம் என்று உறுதியாகக் கூறினார். ஆமையும் அரசியிடம் அப்படியே தான் காத்திருப்பதாகவும் வேறு யாருக்கும் தனது அழகிய மகளை மணமுடித்துக் கொடுக்க மாட்டேன் எனவும் மன உறுதி அளித்தது.

ஐந்து ஆண்டுகள், அரசி அந்த ஆமையையும் தன் மகனின் வருங்கால மனைவியான ஆமையின் அழகிய மகளையும் தொடர்ந்து சந்தித்துவந்தாள். அதெத் என்பது அந்த ஆமையின் அழகிய பெயர். ஒரு நல்ல தருணத்தில் அவன் தன் தந்தையான மன்னிடம் தான் ஆசைப் பட்ட ஆமை அழகிபற்றிச் சொன்னான். அதைக்கேட்டதும் மன்னன் கடும் கோபம் கொண்டான்.

உடனே மக்கள் அதிகம் கூடும் சந்தைப்பகுதிக்கு அந்த ஆமைக் குடும்பத்தினை இழுத்து வரும்படி தன் படைத் தளபதிக்கு கட்டளையிட்டான். படைத் தளபதியும் தன் வீரர்கள் சிலருடன் ஆமைக் குடும்பத்தை இழுத்துவரப்புறப்பட்டுச் சென்றான். நாட்டின் மக்கள் எல்லோரும், அதற்குள் செய்தி அறிந்து சந்தைப் பகுதியில் கூட்டமாகச்சேர ஆரம்பித்துவிட்டனர்.

இளவரசனோ இருதலைக்கொள்ளி எறும்பாகத் துடிக்க ஆரம்பித்தான். ஆமை அழகியையும் அதன் குடும்பத்தினரையும் நிச்சயம் கொன்று விடுவார்கள் என்று வருந்தத் தொடங்கினான். மன்னனோ எந்தவிதச் சலனமும் காட்டாது இருந்தான். படைத்தளபதியும் வீரர்களும் சிலர் ஆமைக்குடும்பத்தை இழுத்து வந்தனர். என்ன ஆச்சர்யம்! ஆமை அழகியின் அழகு எல்லோரையும் மயங்கச் செய்வதாக இருந்தது. இப்படி ஓர் அழகி இந்த நாட்டில் இருந்தாளா என்றும் மக்கள் தங்களுக்குள்ளேயே பேசிக்கொள்ள ஆரம்பித்தனர்.

சிலரோ, இந்த அழகிய பெண் இவ்வளவு நாள் எங்கே ஒளிந்திருந்தாள் என்று வாய்விட்டே, பலரும் கேட்கும் படி குரல் எழுப்பினர். அதில் பல குரல்கள் வயிற்று எரிச்சலாய் தெறித்து விழுந்தன. மன்னன் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு தான் இருந்தான். கொடுமைக்கார மன்னனான அவன் தன் முன்னால் படைத் தளபதி கொண்டுவந்து நிறுத்திய ஆமையின் மகளைப் பார்த்தான். அவனுக்கும் ஆச்சரியம் தொற்றிக்கொண்டது. அவன் வாழ்நாளில் அப்படி ஒரு அழகியைப் பார்த்ததில்லை. உலகத்திலேயே இவள் தான் சிறந்த அழகி என்பதில் கொஞ்சமும் ஐயம் இருக்காது என்பதை அவன் உணர்ந்தான்.

ஆனால், அவன் என்ன முடிவு எடுக்கப்போகிறான்என்பதை திகிலுடன் எதிர் நோக்கியவாறு இருந்தது ஆமைக்குடும்பம். இளவரசனுக்கும் பயமாகத்தான் இருந்தது. மக்களோ, மன்னன் என்ன செய்யப்போகிறான் என்பதை அறிய ஆவலாய் இருந்தனர். மீண்டும் ஒருமுறை அந்த அழகிய பெண்ணை பார்த்த மன்னன் இவளை விட என் மகனுக்கு பொருத்தமானவள் வேறு யாரும் இருக்கமாட்டார்கள். இவள் தான் என் மகனுடன் வாழப்போகிறவள் என்று உரத்த குரலில் சொன்னான். தொடர்ந்து தன் அரசில் பாதியை ஆமைக்கு எழுதித் தருவதாகவும் மேலும் தன் பண்ணைகளையும் ஆமைக்கே அளிப்பதாகவும் அதைப் பாராமரிக்க நூற்றியொரு பெண்களை நியமிப்பதாகவும் இது தவிர முந்நூறு பெண்களை ஆமைக்கு அடிமைகளாக அளிப்பதாகவும் தெரிவித்தான். மக்கள் சந்தோஷம் அடைந்தனர்.

உடனேயே மன்னன் பெரிய விருந்து ஒன்றையும் அறிவித்தான். விருந்தில் பல வகை உணவுகளும் பழங்களும் இனிப்புகளும் வழங்கப் பட்டன. ஆமை தனக்கு அளிக்கப் பட்ட பகுதி நாட்டை திறம்பட ஆட்சி செய்தது. இந்தக் கதையின் மையக் கருத்தே *வறுமை நிரந்தரம் அல்ல என்று உரக்கச் சொல்வதுதான்.*



# முக்கிய உறுப்புக்களை குறி வைக்கும் குருதி அமுக்கம்

(கடந்த வாரத் தொடர்ச்சி...)

**இதயத் தசை வலுவிழத்தல்**

உயர் இரத்த அழுத்த நோய் காரணமாக அதிகமாக வேலை செய்து இதயத் தசை வலுவிழக்க ஆரம்பிக்கும் ஒரு கட்டத்தில் இரத்தத்தை பம்ப் செய்ய முடியாத நிலைக்கு இதயத் தசை தள்ளப்பட்டு (Heat Failure) மரணம் ஏற்படும்.

**பக்கவாதம்:** உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வுப்படி பக்கவாதம் ஏற்படுவதற்கு உயர் இரத்த அழுத்த நோயே முக்கிய காரணம். இதயத்திலிருந்து மூளைக்கு குருதி செல்லும் குழாயில் எவ்விதப் பிரச்சினையும் வரக் கூடாது. இரத்த அழுத்தம் தொடர்ந்து அதிகமாக இருக்கும் நிலையில் மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாயில் அடைப்பு அல்லது இரத்தக் கசிவு ஏற்படலாம். இதனால் பக்கவாதம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.

**பார்வை பறிபோகும்:** உயர் இரத்த அழுத்த நோய் காரணமாக விழித்திரையில் (Retina) உள்ள இரத்தக் குழாய்களில் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பிக்கும். விழித்திரையில் வெண்மையான நிறம் படியத் தொடங்கும். பொதுவான கண் பரிசோதனையின் போதே இந்த மாற்றங்கள் தெரிய வரும். தொடர்ந்து அலட்சியமாக இருந்தால் விழித்திரை இரத்தக் குழாய்களில் இரத்தம் கசியத் தொடங்கி பார்வை பறிபோதும் ஆபத்தும் ஏற்படும்.

**சிறுநீரகங்கள்:** உடலின் இரத்த அழுத்தத்தைப் பராமரிப்பதில் சிறுநீரகங்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. உடலில் இருக்கும் அளவுக்கு அதிகமான உப்பு (சோடியம்) உட்படகழிவுப் பொருட்கள், சிறுநீர், வியர்வை மூலம் வெளியேறுகின்றன. இதில் சிறுநீரகங்களின் பங்கு அதிகம். உயர் இரத்த அழுத்த நோய் காரணமாக உடலில் உள்ள உப்பை வெளியேற்றும் திறனை சிறுநீரகங்கள் இழக்கின்றன. இதனால் உப்பு வெளியேறாமல் உடலிலேயே தங்குகின்றது. இதன் விளைவாக சிறுநீரக இரத்தக் குழாய்கள் உட்பட அனைத்து இரத்தக் குழாய்களிலும் பாதிப்பு ஆரம்பிக்கிறது. தொடர்ந்து அலட்சியமாக இருக்கும் நிலையில் சிறுநீரகச் செயலிழப்பு வரை செல்லும் ஆபத்து உண்டு. கட்டுப்பாட்டில் இல்லாத நீரிழிவு நோய் காரணமாகவும் இரத்த அழுத்த அளவு அதிகரிக்கும்.

**காரணங்கள் என்ன?**

நீரிழிவு நோயைப் போன்று பாரம்பரியத் தன்மை காரணமாக உயர் இரத்த அழுத்த நோய் வருவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. பரபரப்பான வாழ்க்கைச் சூழல், உணவில் உப்பு உட்பட உப்பு உள்ள பண்டங்களை அதிமாகச் சேர்த்துக் கொள்ளுதல் , புகைபிடித்தல், மதுப் பழக்கம், உடல் பருமன் ஆகியவை காரணமாக உயர் இரத்த அழுத்தம் உருவாக வாய்ப்புகள் அதிகம்.

**பரபரப்புத் தன்மை:** சவால் நிறைந்த இன்றைய வாழ்க்கையில் பெரும்பாலானோருக்கு பரபரப்புத் தன்மை உள்ளது. நன்கு சிந்தித்து அன்றாட நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டுக் கொள்வதன் மூலம் பரபரப்பைக் குறைத்துக் கொள்ள முடியும். என்றைக்காவது ஒரு நாள் பரபரப்படைந்தால் தவறில்லை. தொடர்ந்து ஒருவர் பரபரப்படைந்தால் தொடர் உயர் இரத்த அழுத்தம் காரணமாக உடல் நலன் கெடும். இரத்தக் குழாய்கள் சுருங்கும்.

**டென்ஷனும் புகையும்:**

பரபரப்புக்கும் புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இவர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகும் போதெல்லாம் புகைப்பதால் தாம் கஷ்டப்படுவதை வெளியே சொல்ல முடியாத இதயம், ஓசையின்றி பாதிப்புக்குள்ளாகிக் கொண்டே வரும்.

இதேபோன்றுதான் மதுப் பழக்கமும் மதுவுடன் சேர்த்து உப்பு நிறைந்த சிப்ஸ் உட்பட கொழுப்பு நிறைந்த உணவுப் பண்டங்கள் வயிற்றுக்குள் செல்லும். இதன் விளைவாக உயர் இரத்த அழுத்தம் கொழுப்புப் படிவு அளவுகள், இயல்பைத் தாண்டி அதிகரிக்கும். இவையெல்லாம் தேவையா?

**உப்பைக் குறையுங்கள்:**


உயர் இரத்த அழுத்த நோய் இருப்பது தெரிந்தவுடன் ஊறுகாய், சிப்ஸ், கருவாடு, பதப்படுத்தப்பட்ட தோடம்பழச்சாறு ஆகியவற்றைத் தவிர்ப்பது அவசியம். இளம் வயதில் உடலில் சேரும் உப்பு, விளையாட்டு உட்பட வேகமாகச் செயற்படுவதால் எளிதில் வெளியே றிவிடுகிறது. ஆனால், வயது ஆக ஆக உப்பு உடலை விட்டு வெளியேறாமல் தேங்கி தீங்கு விளைவிக்கின்றது.

எனவே, வயதான உடனேயே உணவில் உப்பைக் குறைத்துச் சாப்பிடுவது அவ சியம்.

**உப்பு அதிகமாவதால் விளைவு என்ன?**

நீர், புளி, காரம், எண்ணெய் ஆகியவற்றைக் கொண்டு செய்யப்படும் சமையலில் உப்பில்லாமல் ருசி கிடைக் காது. இதனால் தான் இரசம், வற்றல்குழம்பு, மாமிசஉணவு ஆகியவற்றில் உப்பின் பங்கு அதிகம். குறிப்பாக கெடாமல் பாதுகாக்கக் கூடிய பதப்ப டுத்தப்பட்ட உணவுப் பொருட்களில் உப்பு அதிக மாக இருக்கும். உப்பு அதிக மாவதால் சிறுநீரகங்களில் ஒருவித ஓமோன் உற்ப த்தியாகத் தொடங்கும். இதனால் இரத்த அழுத் தம் அதிகரிக் கும். எனவே, நாக்கைக் கட்டுப்ப டுத்தினால் உயர் இரத்த அழுத்தம் கட்டுப்பா ட்டுக்குள் வரும்.

குறிப்பாக தந்தைக்கோ அல்லது தாய்க்கோ உயர் இரத்த அழுத்த நோய் உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உப்பு உட்பட உப்பு நிறை ந்த உணவுப் பொருட்களை இளம் வயதிலிருந்தே குறைத்துச் சாப்பிடுவது அவசியம். இதன்மூலம் நோய் வராமல் பார்த்துக் கொள்ள முடியும்.



**சிகிச்சை என்ன?**

நீரிழிவுநோயைப்போன்று உயர் இரத்த அழுத்த நோயையும் தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள தொடர் சிகிச்சை அவசியம். மாதத்துக்குஒருமுறைஇரத்த அழுத்த அளவைப் பரிசோதித்துக் கொள்வது அவசியம். மருத்துவர் பரிந்துரைக்கும் மாத்திரைகளைத் தொடர்ந்து சாப்பிட வேண்டும். தினமும் நடைப் பயிற்சிக்கு செல்வதன் மூலமும் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும். மருத்துவர் பரிந்துரைக்கும் மாத்திரைகளுடன் நடைப்பயிற்சி, பரபரப்பற்ற வாழ்க்கைச் சூழல் ஆகியவையும் சிகிச்சையில் அடங்கும் என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். (முற்றும்)




# மீனவர்களை விடுவிக்கக்கோரி கறுப்புக்கொடி போராட்டம்

(இராமேஸ்வரம்)

இலங்கை சிறையில் உள்ள 141 தமிழக மீனவர்களை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரத்தில் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதுடன் விசைப் படகுகளில் கறுப்புக் கொடிகளையும் ஏற்றியுள்ளனர்.

இலங்கை சிறையில் இரண்டு மாதங்களாக அடைக்கப்பட்டுள்ள இராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் மீனவர்கள் உட்பட தமிழக மீனவர்கள் 141 பேரை விடுவிக்கக்கோரி நேற்றுமுன்தினம் முதல் இராமேஸ்வரம் விசைப் படகு மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் இராமேஸ்வரம் பாம்பன் கடற்கரை பகுதிகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. தொழிற்சாலைகள், பட்டறைகள், விடுதிகள் மூடப்பட்டுள்ளன.

இலங்கை கடற்படையின் கெடுபிடி காரணமாக மீன்பிடி தொழிலில் ஏற்பட்ட நட்டத்தால் மீனவர்கள் கடனில் சிக்கி தவிக்கின்றனர். இப் பிரச்சினைக்கு தீர்வு காணவும் சிறையிலுள்ள மீனவர்களை விடுவிக்கவும் மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தியுமே மீனவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். (அ-2)




இலங்கை வங்கியின் 74 ஆவது பிறந்த நாள் நிகழ்வு கோப்பாய் இலங்கை வங்கி கிளையில் அண்மையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் 18+ கணக்கை பேணிய வாடிக்கையாளருக்கு திருமணப் பரிசாக தங்க நாணயம் வழங்கி வைக்கப்பட்ட போது....

# சுயதொழில் கடன் ஊக்குவிப்பு திட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மத்திய வங்கியின் செயற்றிட்டத்தின் கீழ் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டு யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரி மற்றும் தொழில்வழி காட்டல் மையத்தின் மூலம் செயற்ப டுத்தப்படவுள்ள சுயதொழில் கடன் ஊக்குவிப்புசெயற்றிட்டத்தில் இணைய விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கடன் ஊக்குவிப்பு திட்டத் தில் மேற்படி அமைச்சின் கீழ் இயங் கும் தொழில்நுட்பவியல் கல்லூரி, தொழிற்பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபை, இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியவற்றின் மூலம் பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்து கொண்ட மாணவர்கள் இணைந்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இத்திட்டத்தில் இணை ந்து கொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் தமது பெயர் விபரங்களை யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் அமைந்துள்ள தொழில்நுட்பவியற் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் மையத்தில் பதிவு செய்ய முடியும். மேலதிக தகவல்களை 021 222 0028 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# பாலம் அமைக்க வேண்டும்; பாரதீய ஜனதா வலியுறுத்து

இலங்கையின் தலைமன்னாருக்கும் இந்தியாவின் இராமேஸ்வரத்திற்கும் இடையில் பாலம் அமைக்கப்படவேண்டும் என இந்திய பாரதீய ஜனதா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுராக்தாகூர் யோசனையை முன்வைத்துள்ளார்.

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்தநாள் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தப் பாலம் அமைக்கப்படுவதன்மூலம் இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஒத்துழைப்புகளும் நல்லுறவும் மேலும் வளர்ச்சியடையும் எனவும் கூறியுள்ளார்.

மேற்படி பாலம் அமைக்கப்பட்டால் உலகம் முழுவதிலுமுள்ள சுற்றுலா பயணிகள் மற்றும் யாத்திரிகர்களுக்கு உதவியாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பிரித்தானிய செய்தித்தாள்கள் அம்பலப்படுத்திய செய்திகள்...!



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட, சொல்லப்படும் சம்பவமானது அரசியல் வட்டாரங்களில் மீண்டும் மீண்டும் பேசுபொருளாக உலா வந்தது.

மே 23 நாளிட்ட இலண்டன் பிரிஅய் பிரித்தானியாவும் நோர்வேயும் இரண்டு உயர்மட்ட விடுதலைப் புலிகளைக் காப்பாற்ற முயற்சி செய்ததாகவும் அது வீணாகி விட்டது என்றும் இலங்கை படைகள் நெருங்கிவிட்டதாக செய்தி வெளியிட்டது.

மேலும் விடுதலைப் புலிகளது அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் சமாதான செயலகப் பொறுப்பாளர் சீ.புலித்தேவன் இருவரும் சரணடைய முயற்சித்ததாக நம்பியாரை மேற்கோள் காட்டி த டெய்லி ரெலிகிராஃப் செய்தி வெளியிட்டது.

லண்டன்நாளிட்டபிரிஅய்செய்தி அறிக்கையில் பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் டேவிட் மிலிபான்ட் மற்றும் நோர்வே அமைச்சர் எரிக் சொல்கெய்ம் மற்றும் ஐ.நா. அதிகாரிகள் பயங்கரவாதிகள் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட இரண்டு விடுதலைப்புலிகளை- பா.நடேசன் மற்றும் புலித்தேவன்- காப்பாற்ற முயற்சித்தார்கள் எனச் சொல்லப்பட்டது.

இந்த இருவரும் பின்னர் இறந்து கிடக்கக் காணப்பட்டார்கள். அவர்கள் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த போது சுடப்பட்டார்கள் என்றும் அதனால் இலங்கை அரசு போர்க்குற்ற விசாரணைக்கு முகம் கொடுக்க நேரிடலாம் என்று மேற்குலக இராஜதந்திரிகள் எச்சரித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மே 24, 2009 அன்று லண்டனில் இருந்து வெளியாகும் சண் நாளேடு இரண்டு விடுதலைப்புலித் தலைவர்கள் சரணடையச் சென்ற போது சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்று எழுதிய செய்தியை இந்தியன் எக்ஸ்பிரஸ் மறுபிரசுரம் செய்திருந்தது.

ஓர் ஊடக அறிக்கையின் படி விடுதலைப்புலிகளது அரசியல்துறைத் தலைவர்கள் பா.நடேசன் மற்றும் சீ.புலிதேவன் ஆகியோர் வெள்ளைக் கொடியோடு சரணடைய வந்தபோது இலங்கை இராணுவத்தினால் சுட்டிக் கொல்லப்பட்டனர்.

பாலசிங்கம் நடேசன் விடுதலைப் புலிகளது அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆவர்.

சீவரத்தினம் புலித்தேவன் விடுதலைப்புலிகளது சமாதான செயலகத்தின் பொறுப்பாளர் ஆவர்.

இராணுவம் விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதற்குத் தனது இறுதிப் படை நடவடிக்கையை மேற்கொண்டிருந்த வேளையில் நான் விடுதலைப்புலிகளின் தலைமைக்கு ஐக்கிய நாடுகள் சபைக்கும் இடையில் பல நாட்களாக ஒரு இடைத் தரகராகச் செயற்பட்டேன் என சண்டே ரைம்ஸ் நிருபர் மேரி கொலின் எழுதியிருந்தார்.

இந்த நிருபர் இந்த இரண்டு தலைவர்களும் கொல்லப்பட்ட மே 18 காலை என்ன நடந்தது என்பதை ஒரு குழுவில் இருந்து தப்பிய ஒரு தமிழர் விளக்கியதை மேற்கோள் காட்டி எழுதியிருந்தார்.

இந்தத் தமிழர் பின்னர் ஒரு தொண்டு தொழிலாளியிடம் பேசியவர், நடேசன் மற்றும் புலித்தேவன் இலங்கை அணிவகுத்து நின்ற பக்கம் ஒரு வெள்ளைக்கொடியோடு ஒரு பத்துப் பன்னிரண்டு ஆண், பெண் குழு சகிதம் நடந்து போனார்கள். உடனே இராணுவம் இயந்திரத் துப்பாக்கிகளால் அவர்களை நோக்கிச் சுடத்தொடங்கியது என்றார்.

நடேசனது மனைவி அவர் ஒரு சிங்களப் பெண் சிங்களப் பெண் சிங்களத்தில் அந்த இராணுவத்தினரை நோக்கி சத்தம் போட்டார். அவர் சரணடைய முயற்சிக்கிறார். நீங்கள் அவரைச் சுடுகிறீர்கள் என்றார். அவரும் சுட்டுவீழ்த்தப்பட்டார்.

இப்போது தனது உயிருக்குப் பயந்து ஒளிந்திருக்கும் இந்தத் தமிழர் எல்லோரும் சுட்டுக்கொல்லப்பட்டு விட்டார்கள் என்கிறார்.

இது தொடர்பாக டிசெம்பர் 09.2009 அன்று அவுஸ்திரேலியா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சித் தொகுப்பாளரான சரா டிங்கிள் ஐ.நாவுக்கான இலங்கை தூதுவர் பாலித கோகொன அவர்களை காற்றலையில் நேர்காணல் கண்டார். கோகொன் இலங்கையின் வெளியுறவு அமைச்சின் செயலாளராவார்.

இந்த நேர்காணலில் பாலித கோகொன நடேசன் மற்றும் புலித்தேவன் இருவரும் சரண் அடைந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பாக தனக்கு ஒன்றும் தெரியாது என சரா டிங்கிள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறார். ஆனால், மேரி கொலின் கோகொன செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வெறுமனே படைகளுக்கு ஊடாக வெள்ளைக் கொடியோடு மெல்ல நடக்கவும் தரப்படும் ஆணைகளுக்கு இணங்க கவனமாகச் செயற்படவும் இராணுவத்தினருக்கு தற்கொலைக் குண்டுத்தாரிகள் பற்றிப் பயம் இருக்கிறது என்ற செய்தி அனுப்பினார் என எழுதியிருக்கிறார்.

மேரி கொலினுக்குப் பொய் சொல்வதற்கான தேவையில்லை. ஆனால், அந்தத் தேவை பாலித கோகொன அவர்களுக்கு இருக்கிறது. செஞ்சிலுவைச் சங்கத்துக்கு செய்தி அனுப்பியதை ஒத்துக் கொண்டால் அவர் போர்க் குற்ற விசாரணைக்கு முகம்கொடுக்க வேண்டிய அபாயம் இருக்கிறது.

இப்போது டிங்கிள், பாலித கோகொன அவர்களோடு நடத்திய நேர்காணலின் பார்ப்போம்.

டிங்கள்: உள்நாட்டுப் போரின் இறுதி நாட்களில் விடுதலைப்புலிகளின் அரசியல் தலைவர்கள் இரண்டு பேர் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சரண் அடைய முயற்சித்தார்கள்.

இந்தச் சம்பவம் 2009 இல் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் காங்கிரஸுக்கு அனுப்பி வைத்த ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிக்கை ஜனவரி 2009 இல் இருந்து மே 2009 முடியும் வரை இலங்கை பன்னாட்டு மானிடத்துக்கான சட்டத்தை மீறுகிற சாத்தியம் இருப்பதாகச் சொல்லுகிறது.

இந்த அறிக்கை நடேசன் மற்றும் புலித்தேவன் இருவரும் இடையீட்டாளராக இருந்த பன்னாட்டு மற்றும் உள்ளூர் பிரமுகர்களுடன் பேசினார்கள் எனக் குறிப்பிடுகிறது. இடையீட்டாளர்கள் அப்போது வெளியுறவு அமைச்சின் செயலாளராக இருந்த கலாநிதி பாலித கோகொன அவர்களோடு சரணடைவது பற்றி பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

நடேசன் ஐ.நா. ஒரு சாட்சியாக இருக்க வேண்டும் எனக் கேட்டார். ஆனால், அவர்களது பாதுகாப்புக்கு இலங்கை ஜனாதிபதியின் உத்தரவாதம் இருப்பதாகச் சொல்லப்பட்டது.

மே 18 ஆம் நாள் நடேசன் மற்றும் புலித்தேவன் இருவரும் வெள்ளைக் கொடியின் கீழ் ஒரு டசின் ஆண், பெண் ஆகியோரைக் காத்திருந்த இலங்கை இராணுவத்திடம் கூட்டிச் சென்றார்கள்.

அப்போது அவர்களைப் பார்த்து இராணுவத்தினர் இயந்திரத் துப்பாக்கிகளால் சுட்டதாக ஒரு தமிழர் சாட்டி சொன்னார். அந்தக் குழுவில் இருந்த அனைவரும கொல்லப்பட்டார்கள்.

இப்போது கலாநிதி பாலித கோகொன இலங்கையில் ஐ.நா. தூதுவராக இருக்கிறார். அவர் ஒரு அவுஸ்திரேலிய குடிமகன். நாடாளுமன்றக் குறிப்பேட்டின் படி அவர் வெளியுறவு மற்றும் வாணிக திணைக்களத்தின் மூத்த அதிகாரியும் ஆவார். அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கோகொன அவர்களிடம் இந்த சரண் தொடர்பாக அவர் வகித்த பாத்திரம் எவ்வாறானது எனக் கேட்டது.

கோகொன: கட்டோடு எந்தப் பாத்திரத்தையும் நான் வகிக்கவில்லை. காரணம் அப்போது நான் வெளியுறவு அமைச்சில் பணியாற்றினேன். பாதுகாப்பு அமைச்சு அல்லது பாதுகாப்புப் படையினர் ஆகியரோடு எனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை.

நான் எந்த ஒரு ஒழுங்கை செய்வதிலும் சம்பந்தப்படவில்லை. அது மட்டுமல்ல எதுவும் ஒழுங்கு செய்யப்பட்டதாகவும் நான் நினைக்கவில்லை.

டிங்கிள்: அப்படியென்றால் சரணடைவது பற்றி எந்த உடன்பாடும் இல்லை?

கோகொன: என்னைப் பொறுத்தளவில் நிச்சயமாக இல்லை. வேறு யாராவது அப்படியான சரணடைவில் ஈடுபட்டார்கள் எனவும் நான் நினைக்கவில்லை.

டிங்கிள்- அப்படியென்றால் இந்த இரண்டு பேரும் சரண் அடைவதுபற்றி வேறு யாராவது உங்களோடு தொடர்பு கொண்டார்களா?

கோகொன: பாதுகாப்பு நிறுவன ஆட்களோடு? இல்லை.

டிங்கிள்: இந்த இரண்டு பேரும் சரண் அடைவது பற்றி வேறு எவரேனும் உங்களோடு தொடர்பு கொண்டார்கள்?

கோகொன: என்னை நள்ளிரவில் நித்திரையில் இருந்து எழுப்ப முயற்சி செய்யப்பட்டது. ஆனால், நான் நீங்கள் பிழையான ஆளோடு தொடர்பு கொண்டுள்ளீர்கள். எனக்கும் சரண் அடைவதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை, இந்த விடயம் என்ன வழியில் கையாளப்பட வேண்டுமோ அந்த வழியில் கையாளுமாறு நான் அவர்களிடம் சொன்னேன்.

டிங்கிள்: அதென்ன வழி?

கோகொன: மன்னிக்கவும் இப்படியான முட்டாள்த்தனமான கேள்விகளுக்கு என்னால் பதில் சொல்ல முடியாது.

டிங்கிள்: சுடப்படும் 3 வாரங்கள் கழித்து இலங்கை இராணுவத்தின் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவம் மரபுவழி விதிகளைக் கண்டும் காணாதுவிட்டுவிட்டு வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த கிளர்ச்சிக்காரர்களை கொல்ல வேண்டியிருந்தது என்று சொன்னதாக செய்தி வெளிவந்தது.

டொன் றொத்வெல் அவுஸ்திரேலியா தேசிய பல்கலைக் கழகத்தில் பன்னாட்டு சட்டப் பேராசியராக இருக்கிறார்.

கலாநிதி கோகொன ஒரு இராஜதந்திரி என்ற முறையில் அவர் மீது வழக்குத் தொடுப்பதில் விலக்களிப்பு இருக்கிறது.

ஆனால், அண்மைக் காலத்தில் போர் குற்றம் தொடர்பாக பன்னாட்டு சட்ட நீதிமன்றங்கள் இந்தக் கோட்பாட்டினை கேள்விக்கு உள்ளாக்கி இருக்கின்றன.

றொத்வெல்: இப்படி இளைக்கப்பட்டதாகச் சொல்லப்படும் போர்க் குற்றங்களுக்கு கலாநிதி கோகொன நேரடியாகப் பொறுப்பு எனக் குறிப்பாகச் சொல்ல முடியாது.

ஆனால், பன்னாட்டு சட்டம் கட்டளைப்பொறுப்பு என்ற கோட்பாட்டின் கீழ் யாராவது நேரடியாக- இதுபோன்ற குற்றங்களுக்கு சட்டத்துக்கு உட்பட்டதாகவோ அல்லது அரசியல் காரணங்களுக்காகவோ செய்திருந்தால் அதனை அங்கீகரிக்கிறது.

டிங்கிள்: இந்த விடயத்தில் ஒரு தொடக்க விசாரணையை மேற்கொள்ளுவதற்கு போதுமான சான்றுகள் இருக்கின்றன என பேராசிரியர் றொத்வெல் சொல்கிறார்.

றொத்வெல்: கலாநிதி கோகொன அவுஸ்திரேலிய மற்றும் இலங்கை இரண்டினதும் குடியாளர் ஆவார்.

அவுஸ்திரேலிய குடியாளர் என்ற காரணத்தால் சட்டமட்டத்தில் இந்த விடயத்தை விசாரிக்க சுயமாகவே அவுஸ்திரேலியாவுக்குஉரிமையுண்டு

ஆனால், அவர் அவுஸ்திரேலியா அரசின் முன்னாள் உயர் அதிகாரி என்ற முறையில்- அவுஸ்திரேலியாவை பன்னாட்டு பேச்சுவார்த்தையில் சார்புபடுத்தியவர் என்ற முறையில்- குறைந்த பட்சம் தொடக்க விசாரணையை ஆவது தொடக்குவதற்கான பொறுப்பு அவுஸ்திரோலியாவுக்கு இருக்கிறது.

டிங்கிள்: கலாநிதி பாலித கோகொன.

கோகொன: முதலும் முக்கியமாகவும் இந்த குற்றச்சாட்டுக்கள் மெய்ப்பிக்கப்பட வேண்டும். எந்தவொரு நாடும் மெய்ப்பிக்கப்படாத உண்மைகள் மற்றம் மறைமுக அவதூறுகளின் அடிப்படையில் சொல்லப்படும் அற்பத்தனமான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க வேண்டிய அவசியமில்லை.

டிங்கிள்: தோற்கிற நாடுகள் மட்டுமே, போரில் தோற்கிற நாடுகள் தான் போர்க்குற்றங்களுக்காக விசாரிக்கப்படுகின்றன என ஒரு முறை நீங்கள் சொன்னதாக அறிகிறோம். அது உண்மையா?

கோகொன: வரலாற்று அடிப்படையில் அதுதான் உண்மை.

டிங்கிள்: அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அறிக்கை பற்றி மத்திய அரசும் அவுஸ்திரேலிய மத்திய காவற்றுறையும் தங்களுக்குத் தெரியும் எனச் சொல்கிறார்கள்.

ஏ.எவ்.பி. கலாநிதி கோகொன அவர்கள் மீது சாட்டப்படும் போர்க் குற்றங்கள் பற்றி விசாரிக்குமாறு கோரும் எந்த விதப்புரையும் தங்களுக்கு வரவில்லை என்று சொல்கிறது.

சட்டமா அதிபரின் பேச்சாளர் ஒருவர் போர்க்குற்றம் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் நாடுதான் அதனை விசாரணை செய்து வழக்குத் தொடரவேண்டும்.

அதுதான் போர்க்குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை நீதியின் முன் நிறுத்த எடுக்க வேண்டிய பொருத்தமான வழியாகும். **முற்றும்**

**நக்கீரன்**

# கதண்டு மகரிஷியின் கோபம்



ஆன்மீகம் 112


கனகய்யா எங்கே தண்ணீர் என்றார். இந்த நடு கானகத்தில் முக்கண்ணனின் தீப் பார்வை போல் கோபமாக இருந்த திரு. சண்முக சிகாமணி ஐ.ஏ.எஸ் அவர்கள இனி கடுக்காம் கொடுத்து ஏமாற்ற முடியாத என்ற அளவுக்கு கோபமாக இத்தனை பேர் ஏன் என் பின்னே வருகிறீர்கள். தண்ணீர் கூட உங்களால் கொடுக்க முடியவில்லை. நீங்கள் எங்கே தர்த சிந்தனையோத அறநிலையத்தை நிலை நிறுத்தப் போகிறீர்கள் என்று போட்ட போடு இருக்கிறதே!

எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. சரி இதற்கு நாம் என்ன செய்ய முடியும்? சொகுசாய் வாழ்ந்த அதிகாரிகளை அரவணைத்துப்போக வேண்டும் என்ற எண்ணத்தில் மீண்டும் கடுக்காய் கொடுக்க!

என்ன சித்தரே எனக்கே கடுக்காவா? என்று என் மீதும் கோபத்தைக் காட்ட

நடப்பதைப் பார்ப்போம். ஏன் வீணாகக் கோபம், வேறுவழி இல்லை. கோபப்பட்டால் தண்ணீர் வந்துவிடுமா? தாகம் தீர்ந்து விடுமா? இது இறைவனின் சோதனை! சதுரகிரி சுந்தரமகாலிங்கம் மலையில் எத்தனை லட்சம் மக்கள் வருகிறார்கள். உங்கள் இந்து சமய அறநிலையத்துறை தாகத்திற்கு மோரோ தண்ணீரோ மலைமேல் அன்னதானமோ செய்கிறார்களா என்று பாருங்கள் என்று நான் கூறிவிட்டு நடக்க என் பின்னே அனைவரம் ஒரே மூச்சாக வண்ணாத்திப்பாறை அருகில் வந்து அமர்ந்து தீர்த்தத்தை எடுத்துக் கொடுத்தவுடன் சாந்தமான அரசுச் செயலர் ஆயாசமாய் உட்கார, கமிசனர் அவர்கள் உடலில் வேர்கைத் துளிகள் சொட்ட விறுவிறு என்று வந்த இந்துசமய அறநிலைய ஆட்சித் துறையினர் கலகலத்துப்போயினர்.

அரசுச் செயலர் அன்பர் திரு. சண்முக சிகாமணி ஐ.ஏ.எஸ் அவர்கள், சரியான பாடம், இதேபோல் மலைப்பயணம் ஒவ்வொரு ஆலய நிர்வாகியும் மேற்கொண்டால் உடலும் மனமும் அருள் சேவையம் மென் மேலும் உயரும் என்று கூற!



தாய்பாதத்தில் அன்னை சித்தர்

மற்றவர்கள் எப்படியாவது இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக் கமிசனரையும் அரசுச் செயலரையும் ரயில் ஏற்றிவிட்டால்போதும் என்ற எண்ணத்தில் அப்போதைய அறநிலையத் துணை ஆணையாளராக இருந்தவர் கூறிய வார்த்தையால் இன்று வரை எந்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகளையும் என்னால் அழைத்துப் போக விருப்பம் இல்லை.

அப்படி என்ன சொன்னார் அந்தத்துணை ஆணையாளர் அய்யா! சாமி! உனக்குக் கோடி கும்பிடு! இதேபோல் ஐ.ஏ.எஸ் அதிகாரிகளைத் தயவுசெய்து இனிமேல் அழைத்து வந்த எங்கள் உயிரை வாங்க வேண்டாம். இதோடு உங்க நாடகத்தை நிறுத்திக்கொள்ளுங்கள் என்று இரண்ட கை எடுத்துக் கும்பிட்டார்.

நான் திகைத்துப்போனேன் அது முதல் பெரிய அதிகாரிகளை அழைத்துத் தரும வழி காட்ட என் மனம் ஒப்பவில்லை.

ஒவ்வொரு 2010 வருடங்களுக்கு ஒரு பூலோக பிரளயகாலம் என்று கூறுகிறார்களே உலக மக்களின் அறியாமையால் மாயையின் பிடியிலிருந்து விடுபடவும் 2003 இலிருந்து உலகத்தில் ஏற்படும் இயற்கைச் சீற்றங்களின் அழிவிலிருந்து மனிதன் பிழைத்துக் கொள்ள தர்த வழி முறைகளை குருநாதர் சித்தர் பெருமானிடம் கேட்டேன்.

(தொடரும்)

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# நவநீதம்பிள்ளையைக் குற்றவாளியாக்கும் முயற்சி வெற்றி பெறுமா?



ஒரு கட்டத்தில் நவநீதம்பிள்ளையை வைத்து அடைய நினைத்த இலக்கைளஅடைய முடியாது என்ற உண்மையை அரசாங்கத்துக்கு விளங்கிப்போனது. அதனால் தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவரைச் சந்தித்தபோது நாட்டு மக்களில் பெரும்பாலானோர் நீங்கள் ஏற்கனவே அறிக்கை தயாரித்து விட்டுத் தான் வந்துள்ளீர்கள் என்று கருதுவதாக நவநீதம்பிள்ளையிடமே நேரடியாகத் தெரிவித்திருந்தார்.

அது அவரது தனிப்பட்ட கருத்தாக இருந்தாலும் அதை நேரடியாக சொல்ல முடியாததால் தான், பொது மக்களை துரும்பாக பயன்படுத்தியிருந்தார்.

மறுநாள், நவநீதம்பிள்ளை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மனித உரிமை மீறல்கள் குறித்து விபரித்து எதேச்சதிகாரப் பாதையில் இலங்கை பயணம் செய்வதாக வெளியிட்ட கருத்து அரசாங்கத்தை உச்சக்கட்ட கடுப்புக்குள்ளாக்கிவிட்டது.

ஏனென்றால் நவநீதம்பிள்ளையின் இந்தக் கருத்து கொழும்புடன் நின்று போகவில்லை. அதை உலகின் அனைத்து நாட்டு முன்னணி ஊடகங்களுமே தலைப்புச் செய்தியாக்கின. அதன் மூலம் இலங்கை எதேச்சாதிகாரப் பாதையில் சொல்வதாக உலகெங்கும் தகவல் கொண்டு செல்லப்பட்டது.

அடுத்து அவர் இந்த மாதம் நடக்கவுள்ள ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் 24 ஆவது அமர்வில் வாய்மொழியான அறிக்கையைக் கொடுக்கவுள்ளார். அதன் பின்னர் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முழுமையான அறிக்கையைக் கொடுக்கவுள்ளார்.

கொமன்வெல்த் மாநாட்டை நடத்த இலங்கை தயாராகி வரும் நிலையில் இலங்கையில் நடக்கும் கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்ற கருத்தும் பல நாடுகளில் வலுப்பெற்றுள்ள நிலையிலும் நவநீதம்பிள்ளையின் கருத்து அரசாங்கத்துக்கு எரிச்சலூட்டியதில் ஆச்சரியமில்லை.

நவநீதம்பிள்ளை வெளியிட்ட கருத்துக்கள் மட்டுமன்றி அவர் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையும் கூட நியாயமானதாக இருக்காது என்று அரசாங்கம் இப்போதே கூறத் தொடங்கியுள்ளமை அதன் ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.

நவநீதம்பிள்ளை புலம்பெயர் தமிழர்களின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுபவர் என்றும் விடுதலைப்புலிகளிடம் பணம் பெற்றவர் என்றும் விமர்சனம் செய்த அரசாங்கத் தரப்பினர், அவர் கொழும்பில் வைத்து விடுதலைப் புலிகளையும் புலம்பெயர் தமிழர்களையும் கடுமையாக விமர்சித்ததை கண்டுகொள்ளவில்லை.

விடுதலைப்புலிகள் இரக்கமின்றி கொலைகளை செய்தவர்கள என்றும் அத்தகைய அமைப்புக்கு மகத்துவமிக்க ஐ.நா. பரிந்து பேசும் என்று புலம்பெயர் தமிழர்கள் எதிர்பார்க்கக் கூடாது என்றும் நவநீதம்பிள்ளை வெளியிட்ட கருத்தை வேறொரு ஐ.நா. அதிகாரி கூறியிருந்தால் அதை அரசாங்கம் மிகப்பெரிய பிரசாரத்துக்குப் பயன்படுத்தியிருக்கும்.

ஆனால், இங்கே அரசாங்கம் நவநீதம்பிள்ளையை குற்றவாளியாக்குவதிலேயே குறியாக இருந்தது. அதனால் அவர் விடுதலைப்புலிகள் தொடர்பாக வெளியிட்ட கருத்தை அரசாங்கம் முதன்மைப்படுத்தவில்லை.

அந்தக் கருத்து முதன்மைப்பட்டிருந்தால் நவநீதம்பிள்ளைக்கு எதிரான தமது குற்றச்சாட்டு வலுவற்றாகி விடும் என்ற பயம் அரசாங்கத்துக்கு இருந்ததால்தான் அவ்வாறு செய்யவில்லை.

போருக்குப் பிந்திய அபிவிருத்தியை வைத்து மனித உரிமைகள் விடயத்தில் உள்ள பலவீனங்களை ஈடுகட்டி விடலாம் என்ற கருத்து அரசாங்கத்திடம் ஆரம்பத்தில் இருந்தே இருந்து வருகிறது. அங்கிருந்து தொடங்கிய தவறு தான் அரசாங்கத்தை இப்போதும் படுகுழியில் தள்ளிவிட்டுள்ளது.

மனித உரிமைகள் விடயத்தில் சர்வதேசத்தில் எதிர்பார்ப்புக்களை அரசாங்கம் நிறைவேற்றத் தவறியதன் விளைவுகள்தான், நவநீதம்பிள்ளையின் குற்றச்சாட்டுக்களுக்கு காரணமாகியுள்ளன. ஆனாலும் அதனை மறுப்பதற்காக நவநீதம்பிள்ளையைக் குற்றவாளியாக்க முனைந்துள்ளது இந்த அரசாங்கத்தின் உச்சக்கட்ட வங்குரோத்து இராஜதந்திரம் என்றே கருதலாம்.

அதேவேளை நவநீதம்பிள்ளையைக் குற்றவாளியாக்கும் அரசாங்கத்தின் இந்த முயற்சியை சர்வதேச சமூகம் எவ்வாறு பிரதிபலிக்கப் போகிறது என்பது விரைவிலேயே தெரிய வரும். ஏனென்றால் அடுத்த வாரமே ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 24 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகப் போகிறது.

முன்னர் இந்தக் கூட்டத் தொடர் பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று அலட்சியமாக இருந்த அரசாங்கத்துக்கு இது நவநீதம்பிள்ளையின் வாய்மொழி அறிக்கை புதிய சிக்கலாக உருவெடுக்கப் போகிறது.

கே.சஞ்சயன் (முற்றும்)

# பொதுநலவாய உச்சி மாநாட்டில் 99 வீதமான நாடுகள் பங்கேற்கும்

## அமைச்சர் நிமால் நம்பிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டிற்கு 99 வீதமான நாடுகள் பங்குபற்ற இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**



தென்னாபிரிக்காவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சங்கத்தின் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு நாடு திரும்பியதாக தெரிவித்த அமைச்சர், அங்கு சர்வதேச நாடுகளிலிருந்து கலந்து கொண்ட அரச பிரதிநிதிகளிடம் இந்த இணக்கப்பாட்டை தாம் தெரிவித்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை நாட்டை அவர்கள் நேசிப்பதாக தெரிவித்த அமைச்சர், பொது நலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் எமது ஜனாதிபதி தலைமைப் பொறுப்பை ஏற்பது நம்மில் பலருக்கு எரிச்சல் தருவதாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மத்திய மாகாண சபைக்கான தேர்தல் பிரசாரக் கூட்டம் கண்டி குண்டசாலை மைதானத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இக்காலகட்டத்தில் இலங்கையை நிலைகுலையச் செய்வதற்கு சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அராபிய வசந்தம் என்ற பெயரில் மேற்குலகம் அரபு நாடுகளைத் துண்டாட நடவடிக்கை எடுத்து வருகின்றது. அமெரிக்கா இப்போது சிரியா மீது தாக்குதல் தொடுக்கத் தயாராகிறது.

இந்த நாடுகளில் தம்மை நிலைப்படுத்த மனித உரிமை என்ற பெயரில் தமக்கு விருப்பமான தலைவர்களை நியமிக்க முயற்சிக்கின்றனர். அதற்கு இணங்காத தலைவர்களை அழிக்க முயற்சிக்கின்றனர்.

நாம் எமது இறைமையைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அதன் மூலமே எமது எதிர்கால பயணத்தை முன்னெடுக்க முடியும். இம்முறை தேர்தல் மூலம் நாம் இதற்கான செய்தியை உலகிற்கு தெரிவிக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறது. மக்கள் அதனை நம்பத் தயாரில்லை. மக்கள் ஜனாதிபதி மீது அசையாத நம்பிக்கை கொண்டுள்ளனர் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# 2014 இல் சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இரு நாட்டுத் தலைவர்களாலும் ஏற்கனவே சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடுவது குறித்து இணக்கம் காணப்பட்டுள்ளது.

சீன-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை எதிர்வரும் ஆண்டில் கைச்சாத்திடப்படும் என சீனாவிற்கான இலங்கை தூதுவர் ரஞ்சித் உயன்கொட தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கையின் பின்னர் இலங்கை வரிச் சலுகைகளோடு சீனாவுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் இலங்கை ஏற்றுமதியாளர்கள் பாரியளவில் நன்மை அடைவார்கள் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

உலகின் மிகப் பெரிய சந்தையைக் கொண்டுள்ள சீனாவுடன் வர்த்தக உறவுகளைப் பேணுவது நாட்டுக்கு பல வழிகளில் நன்மை பயக்கும் என சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆர்ப்பாட்டத்தை அடக்க இராணுவமா? ஆராய குழு

(கொழும்பு)

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரை அடக்குவதற்கு இராணுவத்தை பயன்படுத்த முடியுமா? என்பது தொடர்பில் ஆராய்வதற்கு மூவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணி சங்கமே மூவர் கொண்ட இக் குழுவை நியமித்துள்ளது.

பொலிஸாருக்குப் பதிலாக, வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இராணுவம், கடல் மற்றும் விமானப் படைகளை ஈடுபடுத்த முடியும் என்றும் சட்டத்தரணி சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா தலைமையிலேயே இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவின் அறிக்கை இரண்டு வாரத்தில் நடைபெறவிருக்கின்ற சட்டத்தரணி சங்கத்தின் நிறைவேற்று குழுவில் ஆற்றுப்படுத்தப்படவுள்ளது. (அ-2)











யாழ். மதர்கெயார் எனும் வைத்திய ஆலோசனை நிலையம் இலக்கம் 514/18 வைத்தியசாலை வீதியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இதன்போது டாக்டர் கு.சுரேஸ்குமார், அவரது பாரியார் திருமதி வாசுகி சுரேஸ்குமார் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் ஏனைய காட்சிகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

# வெலிக்கடை சம்பவம் குறித்த அறிக்கை இந்த வாரம் வெளிவரும்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலை வன்முறைச் சம்பவங்கள் குறித்த அறிக்கை இந்த வாரத்தில் வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

தேவையென்றால் இந்த அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையிடம் சமர்ப்பிக்கத் தயார் என அமைச்சர் கஜதீர தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் இது ஒரு உள்ளக அறிக்கை எனவும் இதனை அம்பலப்படுத்த முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த போது நவநீதம்பிள்ளை வெலிக்கடைச் சிறைச்சாலை தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்டிருந்ததாக தெரிவித்துள்ளார்.

எனவே, தேவையென்றால் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்கத் தயார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இந்திய தரம் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்வது இடைநிறுத்தம்

(கொழும்பு)

இந்தியாவின் எல்விட்டா பாஃமா என்ற மருந்துப் பொருள் நிறுவனத்துடனான கொள்வனவு நடவடிக்கைகளை கைவிடுவதற்கு மருத்துவ தொழில்நுட்ப மற்றும் விநியோக பிரிவு தீர்மானித்துள்ளதாக அதன் பணிப்பாளர் ஹேமந்த பெனரகம கூறியுள்ளார்.

எல்விட்டா பாஃமா நிறுவனத்திடமிருந்து கடந்த வருடம் முதல் தரம் குறைந்த மருந்துப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நிறுவனத்தினால் விநியோக்கிப்படும் மருந்து பொருள் தரம் குறைந்துகாணப்படுமிடத்து, அதற்குப் பதிலாக பணம் அல்லது சிறந்த மருந்துப் பொருளை வழங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

எனினும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறு தரம் குறைந்த மருந்துப் பொருட்களை விநியோகித்தமையின் காரணமாக எல்விட்டா பாஃமா நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளும் மருந்துப் பொருட்களை தற்காலிகமாக நிறுத்திக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனத்திடமிருந்து பெற்று வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட மருந்துப் பொருட்களை, வைத்தியசாலைகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மருத்துவ நிபுணர் குழுவொன்று தற்போது இந்திய நிறுவனத்தின் தலைமையகத்திற்கு அனுப்பப்படவுள்ளது.

அந்தக் குழு மருந்துப் பொருட்களை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் எனவும், இலங்கைக்கு ஔடதங்களை (மருந்துப் பொருட்கள்) இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் தொடர்பாக கூடிய அவதானத்துடன் செயற்படுமாறும் பணிப்பாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# முஸ்லிம்கள் தொடர்பில் எவருடனும் பேசும் அரசியல் அதிகாரம் கூட்டமைப்புக்கு உண்டு

## ஸ்ரீ.மு.காங்கிரஸ் செயலாளர் ஹசன் அலி

(கொழும்பு)

**இலங்கைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த ஐ.நா.மனித உரிமைகள் பேரவை ஆணையர் நவ நீதம்பிள்ளையிடம் முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரஸ்தாபித்திருந் தமை வரவேற்கத்தக்க ஒரு விடயம். முஸ்லிம்கள் குறித்து கரிசனை காட்டி, கருத்துக்களை வெளியிடும் அரசியல் உரிமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலி தெரிவித்துள்ளார்.**

நவிபிள்ளை முஸ்லிம் காங்கிரஸை கூட சந்திக்கவில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே முஸ்லிம்கள் தொடர்பில் நவிபிள்ளையிடம் எடுத்துரைத்ததாகவும் ஆனால், இதில் ஏதேனும் சதி இருக்கலாம் என்ற தோரணையில் சிலர் கருத்துக்களை வெளியிட்டு குழப்ப நிலைமையைத் தோற்றுவிக்க முயற்சிப்பது தொடர்பில் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்துகருத்துத்தெரிவித்தஅவர்,

ஐ.நா.மனித உரிமை ஆணையர் இலங்கை வந்திருந்த போது அவரைச் சந்திப்பதற்கான வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தோம்.

இருப்பினும் அது கைகூடவில்லை. இது தொடர்பில் இலங்கையிலுள்ள ஐ.நா. அலுவலகத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது, அரசியல் கட்சிகளை சந்திப்பதற்கான அனுமதியை வழங்க வேண்டியது இலங்கை வெளிவிவகார அமைச்சுக்குரிய பணியாக இருந்தது.

இந்த நிலையில் தமது அலுவலகத்தால் முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவிக்க முடியாது போனதாக இலங்கையிலுள்ள ஐ.நா.அலுவலக உயர் மட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால், இது தொடர்பில் நாம் வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொண்டு இவ் விடயம் குறித்து எதனையும் வினவவில்லை. இந்தப் பிரச்சினையை பெரிதாக நாங்கள் கருதவுமில்லை.

மனித உரிமைப் பேரவை ஆணையாளர் நாயகம் இலங்கை வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திக்காதிருந்தால் அவரது விஜயம் அர்த்தமற்றதாக போயிருக்கும். கட்சி என்ற அடிப்படையில் இந்த விடயத்தில் நாங்கள் தெளிவாக உள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது சர்வதேச அங்கீகாரம் பெற்ற தமிழ் மக்களின் பாரிய சக்தியாகும் என்பதை நாம் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். அவர்கள் அனுமதி இன்றியே அழைக்கப்பட வேண்டியவர்கள்.

நிலைமைகள் இவ்வாறிருக்க, இந்த விடயத்தில் நாமே அலட்டிக் கொள்ளாத நிலையில் வேறு சில முஸ்லிம் கட்சிகளும் சில அமைப்புக்களும் எங்களுக்காக அறிக்கை விடும் தேவை அவர்களுக்குரியதல்ல.

எங்களை சந்திப்பதற்கு நவிபிள்ளை எந்தவிதத்திலும் மறுப்புத் தெரிவிக்கவில்லை. அமைச்சர் ஹக் கீமை அமைச்சர் மட்டத்தில் நவிபி ள்ளை சந்தித்த போது வழமைக்கு மாறான முறையில் முஸ்லிம்கள் தொடர்பில் மிகுந்த அக்கறையுடன் அவராகவே கேட்டறிந்து கொண்ட தனை நாம் நன்றியுடன் பாராட்டு கின்றோம்.

இதனைவிட நாம், முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் 44 பக்கங்கள் கொண்ட அறிக்கை ஒன்றை அவரிடம் வழங்கியுள்ளோம். அத்துடன் முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அவரிடம் பிரஸ்தாபித்துள்ளது. நிலைமை இவ்வாறிருக்க, இந்த விடயத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் சிலர் அறிக்கை விடுவது என்பது கேலிக்குரியதே.

புத்தளம் பள்ளிவாசலில் பொலிஸார் நடந்து கொண்டவிதம் தொடர்பில் முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுத்தவர் அமரர் தந்தை செல்வா என்பதனை முஸ்லிம் சமூகம் நன்றியுடன் நினைவுகூருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# கலை, பண்பாட்டு விழுமியங்களை வளர்க்க வேண்டியது எமது கடமை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



புற்றளை சித்திவிநாயகர் ஆலய அறநெறி பாடசாலைக்கு நூல் நிலையமொன்றை அமைப்பதுடன் அதற்கேற்ப நூல்களைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். வடமராட்சி வடக்குப் பகுதிக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட அமைச்சர், அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்தகால தேவையற்ற யுத்தத்தினால் எமது சமூகம் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை இழக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருந்தது.

இந்நிலையில் அவற்றை வளர்த்தெடுக்க வேண்டியது இன்றைய கால கட்டத்தில் அவசியமாகவுள்ளது. இந்நிலையில் இந்த அறநெறிப் பாடசாலை ஊடான சமூக மேம்பாட்டு செயற்றிட்டங்களுக்கு நாம் எமது முழுமையான ஒத்துழைப்பையும் ஒத்தாசையையும் வழங்கத் தயாராகவுள்ளோம்.

அத்துடன் இங்குநூல்நிலையமொன்றை அமைத்து அதற்குத் தேவையான நூல்களைப் பெற்றுத் தருவது தொடர்பிலும்கவனம்செலுத்தும் அதேவேளைஉரியநடவடிக்கைகள்முன்னெடுக்கப் படுமென்றும் தெரிவித்தார்.

புற்றளை சித்திவிநாயகர் ஆலய வளாகத்தில் மேற்படி அறநெறிப் பாடசாலை நிரந்தரக் கட்டடம் இல்லாத நிலையிலும் தளபாடப் பற்றாக் குறையுடனும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வவுனியா தே.க.கல்லூரியின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் 20 ஆவது ஆண்டுநிறைவு விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்விழாவை முன்னிட்டு விளையாட்டு சுற்றுப் போட்டிகள், கலையரங்க நிகழ்வுகள், கல்விப் பொருட்காட்சி என்பன இடம்பெறவுள்ளமையால் இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ள விரும்பும் பழைய மாணவ ஆசிரியர்கள், தமது தற்போதைய முகவரி மற்றும் தற்போது வகிக்கும் பதவி என்பவற்றைக் குறிப்பிட்டு கல்லூரியின் பீடாதிபதிக்கு அறிவிக்குமாறு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் தலைவர் கே. பேர்னாட் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் கல்லூரியின் ஆண்டு மலரான **வித்தியா தீபம்** மலரும் வெளியிடப்படவுள்ளது.

இம்மலரில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறி பதவி நிலை உத்தியோகத்தர்களாக பதவி வகிப்போரின் விபரங்களும் வெளியிடப்படவுள்ளதால் இவ்வாறு பதவி நிலை உத்தியோகத்தர்களாக உள்ளோர் தமது புகைப்படங்களுடன் விபரங்களை அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-5)

# 09.2013 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1759 - பாண்டிச்சேரியில் பிரெஞ்சுக் கடற்படைகளுக்கும் ஜோர்ஜ் போக்கொக் தலைமையிலான பிரித்தானியக் கடற்படைக்கும் இடையில் போர் வெடித்தது. பிரெஞ்சுக் கப்பல் பலத்த சேதத்துடன் பின்வாங்கியது.
- 1823 - சிமோன் பொலிவார் பெருவின் ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டார்.
- 1840 - ஒட்டோமான் மற்றும் பிரித்தானிய படைகள் பெய்ரூட் நகர் மீது தாக்குதலைத் தொடுத்தன.
- 1846 - எலியாஸ் ஹோவ் தையல் இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1858 - 55 பண்டோரா என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1898 - ஆஸ்திரியாவின் அரசி எலிசபெத் கொலை செய்யப்பட்டார்.
- 1951 - ஐக்கிய இராச்சியம் ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது.
- 1967 - கிப்ரல்டார் மக்கள், பிரித்தானியாவின் கீழ் தொடர்ந்திருக்க வாக்களித்தனர்.
- 1974 - கினி பிசாவு போர்த்துக்கல்லிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 2000 - மட்டக்களப்பு நகர முன்னாள் நகர தந்தை செழியன் பேரின்பநாயகம், படுகொலை செய்யப்பட்டார்.
- 2002 - சுவிட்சர்லாந்து, ஐநாவில் இணைந்தது.


**இறப்புகள்**

- 1975 - ஜோர்ஜ் தொம்சன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1892)
- 1983 -ஏ. கே. செட்டியார், காந்தி பற்றிய ஆவணப்படத்தை முதன் முதலில் தயாரித்தவர் (பி. 1911)
- 1983 - பீலிக்ஸ் புளொக், சுவிசில் பிறந்த இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1905)
- 2008 - வி. கே. கானமூர்த்தி, ஈழத்து நாதஸ்வரக் கலைஞர் (பி. 1948)

# இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை நடத்துக; பசுமை தாயகம் அமைப்பு அறிக்கை தாக்கல்

(சென்னை)

**இலங்கையில் நடந்த இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.**



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த போரில் ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவி தமிழர்களை சிங்கள பேரினவாத அரசு திட்டமிட்டு படுகொலை செய்தது. மிகப்பெரிய இந்த இனப்படுகொலைக்கு காரணமான இலங்கை அரசு இன்றுவரை தண்டிக்கப்படவில்லை.

இலங்கை இனப்படுகொலைக்கு காரணமானவர்களைத் தண்டிக்கவும், பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுத் தரவும் ஜெனீவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் மூலமாக என்னால் ஏற்படுத்தப்பட்ட பசுமைத் தாயகம் அமைப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஐக்கிய நாடுகள் அவையால் சிறப்பு ஆலோசனை அமைப்பாக அங்கீகரிக்கப்பட்ட பசுமைத் தாயகத்திற்கு ஐ.நா. அமைப்பின் கூட்டங்களில் பங்கேற்று கருத்து தெரிவிக்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் விசாரணை நடத்தப்படுவதற்கு பசுமைத் தாயகம் அமைப்பும் முக்கிய காரணமாக இருந்திருக்கிறது.

இந்த நிலையில், இலங்கை பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விவாதிக்க ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் 24ஆவது கூட்டம் ஜெனீவாவில் நேற்றையதினம் ஆரம்பமாகியுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து கடந்த மாதம் இலங்கைக்கு சென்று விசாரணை நடத்திய ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, அது குறித்த அறிக்கையை இந்தக் கூட்டத்தில் தாக்கல் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் இலங்கை வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களில் தமிழர்களுக்கு சொந்தமான நிலங்கள் இராணுவத்தினரால் திட்டமிட்டு பறிக்கப்படுவது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என வலியுறுத்தி பசுமைத்தாயகம் அமைப்பு அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

2009ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் சிங்கள மயமாக்கல் அதிகரித்து வருகிறது. இலங்கையின் ஒட்டுமொத்த நிலப்பரப்பான 65,619 சதுர கிலோமீற்றரில், 18ஆயிரத்து 880 சதுர கிலோமீற்றர் பரப்பு தமிழர்களுக்கு சொந்தமானவை.

ஆனால், கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 7 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பை தமிழர்களிடமிருந்து இலங்கை இராணுவம் பறித்துக் கொண்டிருக்கிறது. இதனால் பல்லாயிரம் தமிழர்கள் வாழ இடமின்றி தவிக்கின்றனர்.

வாழ்வாதாரத்தை இழந்துவிட்டதால் உணவுக்கு கூட வழியின்றி இவர்கள் வாடுகின்றனர். இதுபற்றியெல்லாம் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் விளக்கியுள்ள பசுமைத் தாயகம் அமைப்பு, இதுபற்றி விசாரணை நடத்த சிறப்பு ஆணையாளர் ஒருவரை அமர்த்தும்படியும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமின்றி, ஐ.நா. மனித உரிமை ஆணையக் கூட்டத்தில் பசுமைத் தாயகம் அமைப்பின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர். அங்கு நடைபெறும் விவாதங்களின்போது இலங்கையில் நடந்த இனபபடுகொலை மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச போர்ககுற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று இவர்கள் வலியுறுத்துவார்கள்.

இலங்கை இனப்படுகொலைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படும் வரையிலும், பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் வரையிலும் பசுமைத் தாயகம் தொடர்ந்து போராடும் என்பதை தெரிவித்துக்கொளகிறேன் என அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

## யாழ். வரும் எதிர்க்கட்சி தலைவர் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பார்

(யாழ்ப்பாணம்)

நாட்டின் பிரதான பிரதான எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வடக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகின்றது.

இத் தேர்தலுக்கான பிரசாரத்தை முன்னெடுக்கும் நோக்கிலேயே ரணில் விக்கிரமசிங்க இன்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு காலை வருகை தரும் ரணில் முதலாவதாக மு.ப. 10.00 மணிக்கு சங்கானை பொதுச் சந்தையிலும் 10.30 மணிக்கு ஆலடிச் சந்தையிலும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளார். நண்பகல் 12 மணிக்கு வல்லிபுர ஆள்வார் கோயிலில் பூசை வழிபாடுகளிலும் பி.ப. ஒரு மணிக்கு சாவகச்சேரி, கொடிகாமத்தில் மக்கள் சந்திப்பிலும், பி.ப. 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் தேர்தல் பிரசாரத்திலும் ஈடுபடுவார், பின்னர் 4.30 மணிக்கு யாழ்.ஆயரைச் சந்திக்கவுள்ளார். பின்னர் மாலை 5.00மணிக்கு பத்திரிகையாளர் சந்திப்பையும் மேற்கொண்ட பின்னர் 6மணிக்கு சங்கிலியன் பூங்காவில் தேர்தல் பிரசார கூட்டத்திலும் பங்குபற்றவுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கிய அமைச்சர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்ற நிலையிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட வருகை தரவுள்ள நிலையிலும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ- 4)


வடமராட்சியில்.......

**மகளிருக்கான பயிற்சிகள்**

புதிய தொகுதி வகுப்புக்கள்

**11.9.2013**

புதன் முதல் ஆரம்பம்





ஃபேஷியல், மணப்பெண் ஒப்பனை

முடி நேராக்குதல்- சுருட்டுதல்- வெட்டுதல்,

கேக் ஐசிங், தையல், துணிகளில் அலங்காரமிடல்



ஓவியக்கலை



ஆரம்பமாகும் பயிற்சிகள் தொடர்பான மேலதிக தகவல்களை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.



**தூரிகை**

நுண்கலை வளாகம்

ம.ம.வி.வீதி, நெல்லியடி



*10.09.2013* இன்று

சேவையில் ஆறும்

ஆசானை

**வாழ்த்துகின்றோம்**

திருமதி

**ஜெசிந்தா இராசம்மா இரவீந்திரன்**

(உப அதிபர் - மு/தேராவில் தமிழ் வித்தியாலயம்)



பணிகளில் உயர்வென
பாரினர் போற்றுகின்ற
மாண்புமிகு சேவை ஆற்றியே
புகழ்பூத்த ஆசானை
பூத்தூவி வாழ்த்துகின்றோம்
ஓய்விலே அமைதிகண்டு
உவகையிலே வழிகாட்டி
வாழ்கவென வாழ்த்துகின்றோம்
வாழ்க ஆசானே பல்லாண்டு வாழ்க

**சேவையை போற்றுவோர்:**

மு/தேராவில் தமிழ் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.

(3907)



அறிவித்தல்

**புங்குடுதீவு காட்டுப்புலம்பதி அரசடி ஸ்ரீ ஆதி வைரவர் ஆலய**

**திருப்பணி நிதிக்கான அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்**

| பரிசு | பரிசுப்பொருள் | பரிசுபெறும் சீட்டிலக்கம் |
|---|---|---|
| முதலாம் பரிசு | குளிர்சாதனப் பெட்டி | 4817 |
| 2 ஆம் பரிசு | தொலைக்காட்சிப் பெட்டி | 9167 |
| 3 ஆம் பரிசு | தையல் இயந்திரம் | 8343 |
| 4 ஆம் பரிசு | சலவை இயந்திரம் | 6382 |
| 5 ஆம் பரிசு | துவிச்சக்கரவண்டி | 6789 |

**ஆறுதல் பரிசுகள்** (10 கையடக்கத் தொலைபேசிகள்)

| | | | |
|---|---|---|---|
| 1. 2660 | 2. 5256 | 3. 0080 | 4. 3084 |
| 5. 2637 | 6. 2205 | 7. 4581 | 8. 2717 |
| 9. 5206 | 10. 0572 | | |

பரிசில்கள் வென்ற அதிர்ஷ்டசாலிகள் உங்களுக்கான பரிசில்களை பெற்றுக்கொள்ள கீழ்வரும் தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளவும். பரிசில்களை பெற வரும்போது தேசிய அடையாள அட்டை, பரிசுச்சிட்டை என்பவற்றை காண்பிக்கவேண்டும்.

தலைவர் : 0772906981, செயலாளர்: 0778702260
பொருளாளர் : 0718247046, 0777752566

தாங்கள் வழங்கிய ஒத்துழைப்பிற்கு நன்றி

ஆலய பரிபாலன சபை

(3906)

# பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது

## சர்வதேச இளைஞர் மாநாட்டில் தீர்மானம்

**சென்னையில் சேவ் தமிழ் இயக்கமும் தமிழீழத்திற்கான மாணவர் போராட்டக் குழு வும் இணைந்து நடத்திய சர்வதேச இளைஞர் மாநாட்டில் தமிழினப் படுகொலை செய்த இலங்கையில் பொது நலவாய தலைவர்கள் மாநாடு நடத்தக்கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.**

பிரித்தானிய தமிழர் பேரவையினால் கடந்த வருடம் 2012 ஆண்டு நவம்பர் மாதம் லண்டன் மாநகரில் உலகத்தமிழர் மாநாடு நடத்தப்பட்டது. அந்த மாநாட்டில் தமிழகத்தில் இருந்து கலந்து கொண்ட அரசியல் கட்சிகள் மற்றும் தமிழ் அமைப்புக்கள் ஈழத் தமிழர் தொடர்பான வேலைத்திட்டங்களை தொடர்ச்சியான முறையில் முன்னெடுத்து வருகின்றனர்.

அவர் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் சென்னையில் சேவ் தமிழ் இயக்கமும் தமிழீழத்திற்கான மாணவர் போராட்டக் குழுவும் இணைந்து தமிழினப் படுகொலை செய்த இலங்கையில் பொது நலவாய தலைவர்கள் மாநாட்டை நடத்தக் கூடாது என்ற முழக்கத் தோடு சர்வதேச இளைஞர் மாநாட்டை நடத்தினர்.

பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது என்றும் மீறி நடத்தப்பட்டால் அதனை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்பதையே பிரதானமாக முன்வைத்து தமிழகம் எங்கும் உள்ள மாணவ அமைப் புக்களும் ஏனைய மாநிலத்தில் உள்ள மாணவ பிரதிநிதிகளும் மற்றும் உலகளாவிய ரீதியில் உள்ள மாணவ பிரதிநிதிகளும் இணைந்து இம்மாநாட்டில் சில தீர்மானங்களை முன்வைத்தனர்.

அத்துடன் எதிர்காலத்தில் உலகரீதியாக தமிழ் இளைஞர்கள் ஒருங்கிணைந்து தமிழீழ விடுதலைக்கான வேலைத்திட்டங்களை முழுவீச்சாக முன்னெடுப்பதற்கு ஆராய்ந்து சில செயற்றிட்டங்களும் வடிவமைக்கப்படவுள்ளன.

இந்த வருட ஆரம்பத்தில் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு தமிழ்நாடு முழுக்க பேரெழுச்சியாக உருவெடுத்து மாணவர் போராட்டத்தை ஒழுங்கமைத்த இக்கூட்டமைப்பு எதிர்காலத்தில் மேலும் காத்திரமான சில செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது. (அ-2)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று திங்கட்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

இதற்கமைய எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத்திருவிழாவும் 18 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (அ-7)

# பாதுகாப்பு செயலர் அளித்த விளக்கம் திருப்தி தருகிறது

## முஸ்லிம் பேரவை தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் கடும்போக்குவாதம் குறித்து அண்மையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்டிருந்த கருத்து திருப்தி அளிப்பதாக இலங்கை முஸ்லிம் பேரவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் முஸ்லிம் பேரவை மற்றும் முஸ்லிம் அமைச்சர்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். அதன் பின்னர் பாதுகாப்புச் செயலாளர் தமது கருத்து குறித்து விளக்கமளித்திருந்தார்.

இலங்கை வாழ் முஸ்லிம்களை இழிவு படுத்தவில்லை எனவும் புற சக்திகளினால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் குறித்தே தான் எச்சரிக்கை விடுத்ததாகவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்திருந்தார்.

பாதுகாப்புச் செயலாளரின் இந்தவிளக்கம் திருப்தியளிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் இந்த விளக்கத்தை வரவேற்பதாகவும் இலங்கை முஸ்லிம் பேரவை தெரிவித்துள்ளது.

சமாதானத்திற்கான முஸ்லிம்களின் பங்களிப்பை புரிந்து கொண்டமை மகிழ்ச்சியளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. இலங்கை வாழ் முஸ்லிம் தொடர்ந்தும் நாட்டின் நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என முஸ்லிம் பேரவை தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கிய சவால்களின் போது பாதுகாப்புச் செயலாளர் வழங்கிய ஒத்துழைப்பு வரவேற்கப்படவேண்டியது என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# இலங்கை அகதி மாணவர்களுக்கு கல்வி அறிவூட்டுவதில் பாரபட்சம்

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கையைச் சேர்ந்த அகதிகளான மாணவர்களுக்கு கல்வியூட்டலில் பாரபட்சம் காட்டப்படுவதாக த ஹிந்து பத்திரிகை குற்றம் சுமத்தியுள்ளது.

இவ் அகதி மாணவர்களுக்கு பொறியியல் துறை மற்றும் ஏனைய துறைகளில் அனுமதிகள் வழங்கப்படுகின்றன. எனினும் மருத்துவத் துறையில் இலங்கை அகதிகளுக்கு வரையறைக்குட்பட்ட அனுமதிகளேவழங்கப்படுகின்றன.

இம் மாணவர்கள் 49 பேர் அண்மையில் அகதி முகாம்களில் இருந்து நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இதில் 17 பேர் பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிலையில் அகதி முகாம் மாணவர்களுக்கு மருத்துவக் கல்வியிலும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-2)


வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2013

கிளிநொச்சி மாவட்டம்



தமிழினத்தின் மூத்த அரசியல் தலைவன்
எதையும் நேருக்கு நேர் உரைக்கும் நேர்மையாளன்
உள்ளும் புறமும் இருவேடம் புனையாப் பேராளன்
கிளிநொச்சி மாவட்டத்தை தந்த சீராளன்
வஞ்சகத்தால் – பதவி மோகத்தால் பொய்யுரைத்து பழி புரிந்தோர் மத்தியில்

நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் மிக்கதோர்
ஆனந்தசங்கரி ஐயாவை
மாகாண சபைக்கு அனுப்பிவைப்போம்

**அன்புசால் கிளிநொச்சி மாவட்ட மக்களே!**
**நீங்கள் நன்றி மறவாதவர்கள்**
**உண்மையை உணரும் திறத்தினர்**
**தர்மம் வெல்லவேண்டும் என்ற**
**கொள்கை கொண்டவர்கள்**
**ஆகையால் உங்கள் தெரிவு**
**வீ.ஆனந்தசங்கரி**

2

கிளிநொச்சி மாவட்ட
தமிழர் மேம்பாட்டு அமையம்

| இலங்கைத் தமிழரசுக் கட்சி | ⌂ | X |
|---|---|---|

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|

(EC/4996)

# கோரையன்கட்டு கிராமத்திற்கு ஒளி கிடைப்பது எப்போது?

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கோரையன்கட்டு கிராமத்திற்கு இது வரையில் மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.**



இங்கு கடந்தகால யுத்தத்தால் இடம்பெயர்ந்து பின்னர் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 75இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இக் குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் பலர் பாடசாலைக் கல்வியைப் பெற்றுவருகின்ற நிலையில் தமது பாடங்களை இரவு வேளைகளில் படிப்பதற்கு மின்சாரமின்றி சிரமப்படுகின்றனர்.

தொழில்முயற்சிகள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளதால் வாழ்வாதாரத்தை முன்னெடுத்து செல்ல முடியாத நிலையும் காணப்படுகின்றது.

இந்தக் கிராமத்தைச் சூழவுள்ள ஏனைய கிராமங்களுக்கு முன்னதாகவே மின்சாரம் வழங்கப்பட்டு விட்ட நிலையில், தாம் மட்டும் தொடர்ந்து இது விடயத்தில் அரசினால் புறக்கணிக்கப் பட்டுள்ளோமோ என்ற எண்ணம் மக்கள் மனதில் தோன்றியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

எனவே, இவ்விடயம் தொடர்பில் உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுப்பதன் மூலம் தமது கிராமத்திற்கு ஒளி கிடைக்கும் என அப்பகுதி மக்கள் காத்திருக்கின்றனர்.(ம)

## மாடுகளை களவாடிய நபருக்கு கடூழிய சிறைத் தண்டனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாணிக்கபுரம், விசுவமடு பிரதேசத்தில் பெருந்தொகையான மாடுகளை களவாடி இலட்சக்கணக்கான பெறுமதிக்கு இறைச்சியாக விற்ற நபர் ஒருவருக்கு எதிராக, மாடுகளை களவெடுத்தமை மற்றும் சேதம் ஏற்படுத்தியமை சம்பந்தமாக 22.10. 2012 அன்று குற்றஞ்சாட்டப்பட்டு ஆஜர் படுத்தப்பட்ட நபர் ஒருவருக்கு விசாரணையின் பின்னர் தலா ஒருவருட கடூழியச்சிறைத் தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்.

சட்டவிரோமான முறையில் மாடுகளை களவாடி இறைச்சிகாக மாடுகளை வெட்டி விற்றதாக சந் தேக நபர் மீது பொலிஸார் குற்றச்சாட்டு சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

# வவுனியாவில் தனியார் பேருந்து சாரதிகளிடையே கைகலப்பு

வவுனியாவில் நேற்று காலை தனியார் பேருந்து சாரதிகளுக்கிடையே கைகலப்பு ஏற்பட்டது.

வவுனியா பஸ் நிலையத்திற்கு முன்பாக தங்காலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பேருந்து பயணிகளை ஏற்றியமையால் வவுனியா தனியார் பேருந்து சாரதிக்கும், தங்காலை பேருந்து சாரதிக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியது.

இதன் பின்னர் பொலிஸார் சம்பந்தப்பட்ட பேருந்து சாரதிகளை விசாரணை செய்ததோடு, அவர்களிடையே சமரசத்தை ஏற்படுத்தி சுமுகநிலைக்கு அவர்களைக் கொண்டு வந்ததாகவும் வவுனியா தனியார் பேருந்து சங்க தலைவர் தெரிவித்தார். (ம-250)

# ரயில்–டிப்பர் விபத்து; குடும்பஸ்தர் பலி!

(குருமன்காடு)

மடு-பரயநாளன்குளம் பிரதான வீதியில் அமைந்துள்ள புகையிரதப் பாதையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம் பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

மடு-பரயநாளன்குளம் பிரதான வீதியில் உள்ள புகையிரதப் பாதையைக் கடந்து செல்லமுற்பட்ட டிப் பர் ரக வண்டி ஒன்று, மடு புகையிரத நிலையத்தை நோக்கி வந்து கொண்டிருந்த புகையிரதத்துடன் மோதி விபத்திற்குள்ளானதாக மடு பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார், தம்பனைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த டிப்பர் வாகனத்தின் சாரதியான வடிவேல் செல்வக்குமார் (வயது 33 )என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார். இவர் ஒரு பிள்ளையின் தந்தை ஆவார்.

சடலம் தற்போது முருங்கன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தவிபத்து தொடர்பான விசாரணையை மடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)

# கும்பாபிஷேகம்

வவுனியா தாண்டிக்குளம் கந்தசாமி ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது. இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணியிலிருந்து மாலை 4 மணிவரை எண்ணெய்க் காப்பு இடம் பெற்று மறுநாள் காலை6.30 மணி முதல் 7.30 மணிவரை கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

சாஹித் திய சிரோன்மணி சிவஸ்ரீ ப.முத்துக மாரசாமி குருக்கள் நல்லாசியுடன் சமஸ்கிருத பண்டிதர் சி.சதாசிவக் குருக் கள்,டீவதாகம கிரியா சாதகம் தியாகசுந் திரக் குருக்கள் உட்பட பல சிவாச்சாரிகளால் வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன. (ம-266)


# ஐக்கிய தேசியக் கட்சியின் மாபெரும் பிரசாரக் கூட்டம்



இடம் : நல்லூர் மைதானம் (சங்கிலியன் பூங்கா, சங்கிலியன் சிலை அருகில்)

காலம் : 10.09.2013 செவ்வாய்க்கிழமை இன்று மாலை 5 மணிக்கு



## சொற்பெருக்காற்றுகிறார்கள்

- ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் **கௌரவ ரணில் விக்கிரமசிங்க**
- கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் **திரு.ரவி கருணாநாயக்க**
- பாராளுமன்ற உறுப்பினர் **திரு.டி.எம்.சுவாமிநாதன்**
- ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளர் **தியாகராஜா துவாரகேஸ்வரன்**
- காரைநகர் பிரதேச சபை உறுப்பினரும் வேட்பாளருமான **கனேசபிள்ளை பாலசந்திரன்**



(EC/4997)



**யாழ்.பிரபல சிம்மொனி இசைக்குழுவின் இன்னிசை கானங்கள் பிரபல பாடகர்கள் சுகுமாரன் , இசையமுதன் இன்னும் பலர் அனைவரையும் வருக வருகவென வரவேற்கின்றோம்.**

நரி தன் கனவில் கூட,
கோழிகளை எண்ணிக்கொண்டே இருக்கும்.
- வாலஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பிள்ளைப் பாசம் உணரா பிண்டங்களோ நீங்கள்!

வடபகுதியில் காணாமல் போனோர் என எவரும் இல்லை என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா கூறியதாக வெளிவந்த செய்தி தமிழ் மக்களை மிக மோசமாக நோகடித்துவிட்டது.

இதைவிட இன்னும் மோசமானது காணாமல் போனோர் எனக் கூறுவது அரசாங்கத்திடமிருந்து நட்டஈட்டைப் பெறுவதற்காகவே எனக் கூறியிருப்பதாகும்.

இனவாதம் என்ற பேய் புகுந்துவிட்டால் எதுவும், எப்படியும் பேசலாம் என்ற நிலைமை இலங்கையில் இருக்கக்கூடிய மிக கொடும் செயலாகும்.

வடபுலத்தில் யுத்த சூழ்நிலையிலும், யுத்தம் முடிவுற்ற பின்னரும் பலர் காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போன தங்கள் உறவுகளை வருடக்கணக்கில் தேடி அலைகின்ற – அவர்களுக்காக சதா கண்ணீர் வடிக்கின்ற பெற்றோர்களை, வாழ்க்கைத் துணையை, பிள்ளைகளை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள்.

காணாமல் போன தங்கள் உறவுகளுக்காக ஊனை உருக்கி, உடலை எரித்துக் கொண்டிருக்கும் அந்தப் பாசத்திற்கு முன்னால், உங்களின் ஈனச் செயலுக்காக மன்னிப்புக் கேட்க வேண்டிய நேரத்தில்,

நட்டஈட்டுக்காகவே காணாமல் போனதாகக் கூறுகின்றனர் என்று செப்பும் மகாகொடுமைத்தனத்தை எந்த மொழியில் சொல்லி ஆற முடியும்?

எங்களுக்கு எங்கள் பிள்ளைகள்தான் வேண்டும். அவர்களின் இறப்புச் சான்றிதழ் அல்ல என்று வீதியில் புரண்டு அழும் பெற்ற தாய்மாரின் வேதனை புரியா பிண்டங்காள், உங்களிடமிருந்து எதனையும் கேட்டுப் பெற முடியாது என்பது சர்வ நிச்சயமாகிவிட்டது.

இனவாதத்திற்காக, பெற்ற பாசத்தை உணராதவர்கள் இருப்பார்களாயின் அவர்களைவிட நெடுங்காட்டில் வாழும் கொடிய விலங்குகள் மிகவும் உயர்வானவை என்றே கூற வேண்டும்.

வடக்கில் காணாமல் போனவர்கள் என்று எவரும் இல்லை. அரசாங்கத்திடமிருந்து நட்டஈட்டைப் பெறுவதற்காகவே காணாமல் போனதாகக் சொல்லப்படுகிறது எனக் கூறப்படுமாயின்,

போரில் உயிரிழுந்துபோன எத்தனை தமிழ் மக்களுக்கு இலங்கை அரசுகள் நட்டஈடு கொடுத்துள்ளன என்பதை பகிரங்கப்படுத்தும் திராணியும் சம்பந்தப்பட்டவர்களிடம் இருக்க வேண்டும்.

தென்பகுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் உயிரிழந்தால் உடன் செலவையும் அரசே பொறுப்பேற்கும் என்று அறிவித்த இந்த நாட்டில்; வட பகுதியில் குண்டுபோட்டதில் உயிரிழுந்த அப்பாவித் தமிழ் மக்களுக்கு நீங்கள் மாநாடு கூட்டி கொடுத்த பட்டம் பயங்கரவாதி என்பது தான்.

பயங்கரவாதி என்று கையொப்பமிட்டாலே இறந்த தமிழ் மகனின் உடலை உறவுகள் பொறுப்பேற்க முடியும் என்ற நிட்டூரம் நடந்த இந்த நாட்டில் இது மட்டுமல்ல; இன்னமும் சொல்வார்கள்.

என்ன செய்வது! எங்கள் அரசியல்வாதிகளின் இரட்டை வேடம் கலையாத வரையில் இத்தகைய கொடும் சொற்களைக் கேட்பது தவிர்க்க முடியாததே.

ஆனாலும் கடவுளின் தீர்ப்பிலிருந்து யாரும் தப்ப முடியாது என்பது மட்டும் சர்வநிச்சயம்.

# மனிதவுரிமை மீறல்களில் பொலிஸார் ஈடுபடுகின்றனர்

## பிரித்தானிய தன்னார்வ தொண்டு நிறுவனம் குற்றச்சாட்டு

இலங்கை பொலிஸார் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டதாக பிரித்தானிய தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்று குற்றம் சுமத்தியுள்ளது.

3 ஆயிரத்து 500 இலங்கை பொலிஸாருக்கு ஸ்கொட்லாந்து மற்றும் பிரித்தானிய பொலிஸார் பயிற்சிகளை வழங்கியுள்ளனர் எனவும் 2007 ஆம் ஆண்டு முதல் பயிற்சிகள் வழங்கப்பட்டன எனவும் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இப் பயிற்சிகளைப் பெற்றுள்ளனர் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள் ளது.

ஸ்கொட்லாந்தின் கோப்ரெட் வோட்ச் என்ற அமைப்பே இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்திருந்த தருணத்திலும் பொலிஸார் மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்தியுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளது.

மேலும் பல சந்தர்ப்பங்களில் ஸ்கொட்லாந்து அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்து பயிற்சிகளை அளித்துள்ளனர். சில சந்தர்ப்பங்களில் இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களை ஸ்கொட்லாந்துக்கு அழைத்தும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கை பொலிஸார் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டதாக சர்வதேச மன்னிப்புச்சபை ஸ்கொட்லாந்து கிளை குற்றம் சுமத்தியுள்ளது.

பொதுமக்கள்மீது துப்பாக்கிச்சூடு நடத்திய படையினருக்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்கியதாகவும் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருந்த கைதிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டவிரோத கைதுகள், சித்திரவதைகள், பலவந்தமான காணாமற்போதல்கள் போன்ற சம்பவங்களுடன் பொலிஸாருக்குத் தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தியுள்ளது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடித்து வருவதாகவும் இலங்கை பொலிஸாருடனான தொடர்புகள் குறித்து விசாரணை நடத்த வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபையின் ஸ்கொட்லாந்து கிளை கோரிக்கை விடுத்துள்ளது. (அ-2)

# தமிழர்களுக்கு பொன்சேகா துரோகமிழைத்துள்ளார்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

இறுதி யுத்தத்தில் எவரும் இராணுவத்திடம் சரணடையவில்லை என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியிருப்பதன் மூலம் அவர் தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்துள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வடமாகாண சபை வேட்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கமும் எழிலனின் மனைவியான அனந்தி சசிதரனும் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலின்போது இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் வாக்குகளினைப் பெற்ற சரத் பொன்சேகா இறுதி யுத்தத்தில் எவரும் சரணடையவில்லை என கூறியுள்ளதன் மூலம் மீண்டும் அவர் தமிழ் மக்களிற்கு துரோகமிழைத்துள்ளார் என இருவரும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர்கள் இருவரும் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் இராணுவத் தளபதி முள்ளிவாய்க்கால் யுத்தத்தின்போது எவரும் சரணடையவில்லை என கூறியிருப்பது கண்டிக்கத்தக்கதொன்றாகும்.

இதனை அவர் என்ன நெஞ்சழுத்தத்தில் யாழ்ப்பாணத்தில் கூறியுள்ளார்?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இராணுவத் தளபதி பொன்சேகாவும் போர்க்குற்றவாளிகளே! அவர்கள் இருவரும் சர்வதேச நீதிமன்றினால் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டியவர்கள்.

இறுதிப் போரில் பல்லாயிரக்கணக்கானவர்கள் சரணடைந்தமைக்கு சாட்சியாக 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் உள்ளனர்.

இப் போர்க்குற்றவாளிகளினை யாழ்ப்பாண மக்கள் அனுமதித்ததே தவறு. செப்ரெம்பர் 21 அன்று இருவரும் வெட்கித் தலைகுனிவர். அதை நாமும் பார்க்கத்தான் போகின்றோம்.

அரசு வடக்கில் வெற்றி பெற்றால் முள்ளிவாய்க்காலில் நடந்ததனை தமிழர்கள் ஆதரித்துவிட்டனர் என சர்வதேசம் நம்பிவிடும். ஆகையினால் நாம் அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

நாம் பயங்கரவாதிகள் அல்ல. விடுதலை வேண்டி போராடிய ஒரு தேசிய இனம். ஆகையினால் தமிழீழம் என கூறுவதில் பயம் தேவையில்லை என்றனர்.

மேலும் இந்தியா அயல் நாடாக உள்ளமை எமக்கு சாபக்கேடாகும். இந்தியாவினை நான் ஒருபோதும் நம்பியதில்லை. எம்மை இந்தியாதான் திட்டமிட்டு அழித்தது என்றார் எழிலனின் மனைவி அனந்தி.

(செ-4)

# இராணுவம் வெளியேறியது

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி மாலுசந்திப் பகுதியில் முகாமிட்டு நிலை கொண்டிருந்த இராணுவம் வெளியேறிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி மாலுசந்தி வீதியில் அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு அருகில் உள்ள காணி ஒன்றில் முகாமிட்டிருந்த இராணுவமே அப்பகுதியிலிருந்து வெளியேறிச் சென்றுள்ளது.

இதையடுத்து குறித்த காணியும் வீடும் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (செ-5-10)

# தென்னை நாற்றுக்கள் வழங்கப்படுகின்றன

(கரணவாய்)

நாவலர்மடம் கமக்கார அமைப்பு மற்றும் மீள் எழுச்சி அபிவிருத்தி அமைப்பு ஆகியவற்றால் குறைந்த விலையில் பயனாளிகளுக்கு தென்னை நாற்றுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்படி இந் நாற்றுக்களை பெற விரும்பும் பயனாளர்கள் குறித்த கமக்கார அமைப்பின் தலைவர் உ. கணபதிப்பிள்ளையுடன் தொடர்பு கொள்வதன் மூலம் தென்னை நாற்றுக்களை குறைந்தவிலையில்பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 ஆயிரம் எண்ணிக்கை வரையில் உருவாக்கப்பட்டுள்ள இத்தென்னை நாற்றுக்கள் 3 வருடங்களில் பயன் தரக் கூடியவை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5-60)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## வெற்றி வாழ்வின் இரகசியம்



❖ நன்மை செய்யவும், நல்லவர்களாக வாழவும் விரும்புபவர்களுக்கு உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள்.

❖ உண்மை எதற்கும் தலை வணங்கத் தேவையில்லை. மனித சமூகம் தான் உண்மைக்குத் தலை வணங்க வேண்டும்.


❖ எல்லாவிதமான அறிவும் மனிதனுக்குள்ளேயே இருக்கிறது. அதை விழித்து எழச் செய்வதே நல்லாசிரியரின் கடமை.

❖ இன்றைய கல்வித்திட்டம் மனிதனை இயந்திரமாக மாற்றிக் கொண்டிருக்கிறது. ஒழுக்கம், மனவலிமை, பரந்த அறிவு இவற்றை புகட்டுவதாக கல்வித்திட்டம் மாற வேண்டும்.

❖ மனிதர்கள் விலங்குகளைவிட அதிக ஒழுக்கமானவர்களாக இல்லை. சமுதாயக் கட்டுப்பாடு என்ற சாட்டையால் மனிதன் அடக்கி வைக்கப்பட்டிருக்கிறான்.

❖ கற்புநெறியில் இருந்து பிறழும் போது, மனித சமூகம் முடிவை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகும்.

❖ நாம் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்வை அனுசரித்து அமைத்துக் கொள்வது தான் வெற்றி வாழ்வுக்கான இரகசியம்




# 2020 ஒலிம்பிக் ஜப்பானில்....

2020ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை நடத்த ஜப்பானின் டோக்கியோ நகரம் தெரிவாகியுள்ளது. சர்வதேச ஒலிம்பிக் செயற குழுவின் இறுதிக் கட்ட வாக்கெடுப்பிலேயே டோக்கியோ தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் இரண்டாவது தடவையாக டோக்கியோ நகரம் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தவுள்ளது. இதற்கு முன்னர் 1964ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை டோக்கியோ நடத்தியிருந்தது.

இடம்பெற்ற இறுதிக்கட்ட வாக்கெடுப்பில் டோக்கியோ நகரம் எகிப்தின் இஸ்தான்ஃபுல்லைத் தோற்கடித்து இந்த வாய்ப்பைப் பெற்றுக் கொண்டது. வாக்கெடுப்பில் டோக்கியோ 60 வாக்குகளையும் இஸ் தான்ஃபுல் 36 வாக்குகளையும் பெற்றன.



அமெரிக்க திறந்த டெனிஸ் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதி போட்டியில் நடப்பு சம்பியனும், முதல்நிலை வீராங்கனையு மான அமெரிக்காவின் செரீனா வில்லியம்சும் உலகின் 2ஆம் நிலை வீராங்கனை பெலாரசின் விக்டோரியா அசரென்காவும் மோதினர். இதில் செரினா வில்லியம்ஸ் 7-5, 6-7, 6-1 எனற செற்றில் அசரென்காவை வீழ்த்தினார். இந்த வெற்றி மூலம் அமெரிக்க திறந்த டெனிஸ் போட்டியின் சம்பியன் பட்டத்தை 5ஆவது முறையாக கைப்பற்றியுள்ளார் செரீனா.

# வாக்கெடுப்பில் வெற்றிபெற்றது மல்யுத்தம்

2020ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக்கில் பாரம்பரிய விளையாட்டான மல்யுத்தம் தொடர்ந்தும் இடம்பிடித்துள்ளது. இதற்கான வாக்கெடுப்பில் ஸ்குவாஷ் விளையாட்டை வீழ்த்தி இடத்தை தக்க வைத்துக் கொண்டது மல்யுத்தம்.

### சர்ச்சைக்குரிய முடிவு

2020ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டியில் இடம்பெறும் விளையாட்டு பட்டியலில் இருந்து மல்யுத்தத்தை நீக்குவது என்று கடந்த பெப்ரவரி மாதம் நடந்த சர்வதேச ஒலிம்பிக் சபை(ஐ.ஓ.சி.) நிர்வாக குழு கூட்டத்தில் அதிரடியாக முடிவு செய்யப்பட்டது.

ஏராளமான ரசிகர்களை கொண்ட பழமை வாய்ந்த விளையாட்டான மல்யுத்தம் ஒலிம்பிக்கில் இருந்து நீக்கப்பட்டதற்கு பல்வேறு தரப்பிலும் எதிர்ப்பு கிளம்பியது. ஏனெனில் நவீன ஒலிம்பிக் தொடக்கப்பட்ட 1896ஆம் ஆண்டில் இருந்து (1900ஆம் ஆண்டை தவிர) மல்யுத்தம் தொடர்ந்து இடம்பெற்று வந்தது. இந்தியாவுக்கு மல்யுத்தத்தில் இதுவரை 4 பதக்கங்கள் கிடைத்துள்ளது. ஐ.ஓ.சி.யின் முடிவுக்கு இந்தியாவிலும் கடும் கண்டனங்கள் எழுந்தன.

### மீண்டும் மல்யுத்தம்

2020ஆம் ஆண்டு ஒலிம்பிக்கிற்கான விளையாட்டு பட்டியலில் ஒரே ஒரு இடம் மட்டுமே வெற்றிடமாக இருந்தது. அந்த இடத்தை பிடிக்க மல்யுத்தம், ஸ்குவாஷ் மற்றும் ஒருங்கிணைந்த பேஸ்பால்-சாப்ட்பால் ஆகிய மூன்று விளையாட்டுகள் போட்டியிட்டன.

இந்த நிலையில் இவற்றில் எந்த விளையாட்டை சேர்ப்பது என்பதை முடிவு செய்ய ஆர்ஜென்டீனாவில் நடந்துவரும் ஐ.ஓ.சி. பொதுக்குழு கூட்டத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் 95 ஐ.ஓ.சி. உறுப்பினர்களில் 49 பேரின் ஆதரவை பெற்று மல்யுத்தம் அமோக வெற்றி பெற்றது. இதன் மூலம் மல்யுத்தம் 2020ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் மட்டுமின்றி 2024ஆம் ஆண்டு ஒலிம்பிக்கிலும் இடம் பெறுவது உறுதியாகி இருக்கிறது.

# ஆண்கள் இரட்டையர் பிரிவில் பயஸ்சோடி சம்பியன்

அமெரிக்க திறந்த டெனிஸ் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், ரேடக் ஸ்டெபானக்(செக் குடியரசு) ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

ஆண்கள் இரட்டையர் பிரிவு இறுதி யாட்டத்தில் இந்தியாவின் பயஸ், ஸ்டெபானக் ஜோடி, அலெக்சாண்டர் பெயா(ஆஸ்திரியா), புருனோ சோரசை(பிரேசில்) எதிர்கொண் டது. அனுபவ பயஸ் ஜோடி முதல் செற்றை 6-1 எனவும் இரண்டாவது செற்றை 6-3 என்ற ரீதியிலும் கைப்பற்றியது. இறுதியில் பயஸ், ஸ்டெபானக் ஜோடி 6-1, 6-3 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

# சச்சினின் கோரிக்கை

எனது மகன் அர்ஜுனுக்கு நெருக்கடி அளிக்க வேண்டாம் என்று நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் பத்திரிகையாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் ஆட்டங்களில் நூறு சதங்களை அடித்த சச்சினுக்கு மும்பை விளையாட்டு பத்திரிகையாளர்கள் சங்கம் விருது அளித்து கௌரவித்தது.

அந்த நிகழ்ச்சியில் சச்சின் உரையாற்றுகையில்,

எனது மகன் தற்போது கிரிக்கெட் விளையாடி வருகிறான். என்னுடன் அவனை ஒப்பிடக் கூடாது. எனது தந்தை ஆசிரியராக இருந்ததால், இளம் வயதில் நான் விளையாடியபோது எனக்கு இதுபோன்ற நெருக்கடி இல்லை. அர்ஜுன் அவனது அடையாளத்தை வெளிப்படுத்த வேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

# உலக காற்பந்து வரலாற்றில் அதிக விலைக்கு வாங்கப்பட்டார் கரேத்

உலக காற்பந்து வரலாற்றில் அதிக தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு, வேல்ஸ் காற்பந்து வீரர் கரேத் பலே சாதனை படைத்துள்ளார்.

28 வயதான போர்ச்சுகல் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ, மான்செஸ்டர் யுனைடெட் கிளப் அணியில் இருந்து, ரியல் மாட்ரிட் அணியில் இணைய 818 கோடி ரூபாய் கொடுத்து வாங்கப்பட்டார்.

இதனை முறியடித்து 24 வயதான இங்கிலாந்தின் வேல்ஸ் அணி வீரர் கரேத் பலே உலக சாதனை படைத்துள்ளார். டாட்டன்ஹாம் அணியில் கடந்த 2007இல் 72 கோடிக்கு ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

தற்போது ஸ்பெயினின் ரியல் மாட்ரிட் அணி இவரை 6 ஆண்டு ஒப்பந்தம் செய்தது. இதற்காக பலேவுக்கு 880 கோடி ரூபாய் வரையில் கொடுத்துள்ளதாக தெரிகிறது.

# தெற்காசிய காற்பந்து போட்டியின் இறுதிக்கு ஆப்கானிஸ்தான் தகுதி

தெற்காசிய காற்பந்தாட்டச் சம்மேளனத்தின் காற்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஆப்கானிஸ்தான் அணி தகுதிபெற்றுள்ளது. அரையிறுதிப் போட்டியில் நேபாள அணியைத் தோற்கடித்தே ஆப்கானிஸ்தான் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தஸ்றித் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தியிருந்தன.

போட்டியின் 11ஆவது நிமிடத்தில் ஆப்கானிஸ்தான் அணியின் சஞ்சய் அஹமடி கோலொன்றைப் பெற்றுக் கொடுத்தார். அதன் பின்னர் இரு அணிகளும் போராடிய போதிலும், இரு அணிகளாலும் கோல்களைப் பெற்றுக் கொடுக்க முடிந்திருக்கவில்லை.

இந்த வெற்றியின் காரணமாக ஆப்கானிஸ்தான் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.



அகில இலங்கை
யாழ்.நல்லூர் நாவலர் வீதி,
சீரடி சாயி மந்திரின்
5 ஆவது வருட
அலங்கார உற்சவம்

10.09.2013 கொடியேற்றம் (சக்கரசேவை)
11.09.2013 நவசக்தி கணபதிபூசை (சர்ப்ப வாகனம்)
12.09.2013 யந்திர பூசை (பல்லக்கு சேவை)
13.09.2013 அம்பாளின் ருது விழா (தண்டிகை சேவை)
14.09.2013 விசேட துனி பூசை (கருடசேவை)
15.09.2013 ஸ்ரீ பாத பூசை (பூப்பல்லக்கு)
16.09.2013 விளக்குப் பூசை, குங்கும அர்ச்சனை (நட்சத்திர சேவை)
17.09.2013 சப்பைரத பவனி (மாலை 5.30 மணி)
18.09.2013 தேர்த் திருவிழா (மாலை 3 மணி)
19.09.2013 தீர்த்தத் திருவிழா (மாலை 3மணி)
20.09.2013 வைரவர் சாந்தி

ஏனைய நாட்களில் 3.30 மணிக்கு அபிசேக பூசைகளோடு ஆரம்பமாகி மாலை 6.30 மணிக்கு நிறைவுறும்

சப்பைரத உற்சவம் அகில இலங்கையில் முதன் முறையாக நடைபெறவுள்ளது.

ஆலயத்தினர்
சீரடி சாயி மந்திர்
314, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே : 0777222568

(3904)

# தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டி யாழுக்கு பத்து பதக்கங்கள்

தேசிய மட்ட ஜோன் டார்பட் மெய்வல்லுநர் போட்டியில் இரண்டு தங்கம் நான்கு வெள்ளி. நான்கு வெண்கலம் உட்பட மொத்தமாக பத்து பதக்கங்களை யாழ்ப்பாண மாவட்டம் பெற்றுக்கொண்டுள்ளது.

இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஜோன் டார்பட் என அழைக்கப்படும் 83ஆவது தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு சுகதாஸ விளையாட்டரங்கில் கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் நேற்று முன்தினம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையும் நடைபெற்றது.

யாழ். மாவட்டம் சார்பாக அளவெட்டி அருணோதயா மற்றும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆகிய அணிகள் தேசிய மட்ட ரீதியில் குறிப்பாக கோலூன்றிப் பாய்தலில் பிரகாசித்தன.

இம்முறை நடைபெற்ற போட்டிகளில் இரண்டு தங்கம். நான்கு வெள்ளி. நான்கு வெண்கலம் உட்பட மொத்தமாக பத்து பதக்கங்களை யாழ்ப்பாண மாவட்டம் பெற்றுக்கொண்டுள்ளது. பெறப்பட்ட இரண்டு தங்க பதக்கங்களும் கோலூன்றிப் பாய்தலில் அருணோதயக் கல்லூரி வீரர்கள் பெற்றுக் கொண்டதாகும்.

அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி இரண்டு தங்கப்பதக்கம் ஒரு வெள்ளிப் பதக்கம். மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கம் உட்பட ஐந்து பதக்கங்களையும். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி இரண்டு வெள்ளி. இரண்டு வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக நான்கு பதக்கங்களையும். யாழ்ப்பாணம் இந்து கல்லூரி அணி ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டன.

## அவுஸ்.உயர்...

போட்டியிடும் தி.துவாரகேஸ்வரன் உட்பட வேட்பாளர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இன்று காலை 11 மணியளவில் யாழ்ப்பாணம் ஆனைப்பந்திப் பகுதியில் அமைந்துள்ள முதன்மை வேட்பாளர் துவாரகேஸ்வரனின் வாசஸ்தலத்தில் இடம்பெறும் இந்தச் சந்திப்பினை அடுத்து ஆஸி உயர்ஸ்தானிகர் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி.யாழ்.ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் . யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் உள்ளிட்டோரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இதேவேளை.அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகருடன் தூதரக இரண்டாம் நிலை அதிகாரியும் அரசியல்ஆலோசகருமான திருமதி ரொபின் லூசிட் அவர்களும் வருகைதரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

## தென்னாபிரிக்கா செல்கிறார் சகீர்

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் தென்னாபிரிக்காவில் பயிற்சி மேற்கொள்ள உள்ளார்.

உடற்தகுதி இல்லாததால் கடந்த சில தொடர்களில் சகீர்கான் இடம்பெறவில்லை.

இதனையடுத்து தனது உடற்தகுதியை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்காக பிரான்ஸ் நாட்டில் 6 வாரம் பயிற்சி மேற்கொண்டார்.

இந்நிலையில் தற்போது தனது பந்துவீச்சு திறனை மீண்டும் மேம்படுத்துவதற்காக தென்னாபிரிக்காவுக்கு சென்று பயிற்சி பெற உள்ளார்.

கடந்த 6-ம் திகதியே தென்னாபிரிக்கா செல்ல முயன்றும். விசா கிடைக்காத காரணத்தால் முடியாமல் போனது.

அங்கு கேப்டவுன் சென்று. இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் கேரி கிறிஸ்டனிடம் பயிற்சி எடுக்கிறார்.

3 வாரம் அவரிடம் பயிற்சி எடுக்க திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

## முன்னாள் போராளி...

பூசா தடுப்பு முகாமில் இருந்து நீதிமன்ற உத்தரவுக்கமைய ஒரு வருட புனர் வாழ்வுப் பயிற்சிக்காகத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்களே என புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜகத் விஜேதிலக்க தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் முழு நேர உறுப்பினர்களாக இருந்து. இராணுவத்தினருடன் சண்டைகளில் ஈடுபட்டிருந்தவர்களில் ஒரு தொகுதியினரே தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களில் இதுவரையில் 11 ஆயிரத்து 562 பேர் புனர்வாழ்வு பயிற்சியின் பின்னர் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகவும். இன்னும் 238 பேர் புனர்வாழ்வு பயிற்சி பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதி யுத்தம் முடிவடைந்ததும். பொது மன்னிப்பளிக்கப்படும் என்று அரசாங்கம் தமக்களித்த உறுதி மொழியையடுத்து. இராணுவத்தினரிடம் தாங்கள் சரணடைந்ததாகவும். அதன் பின்னர் தாங்கள் பல இடங்களில் தடுத்து வைக்கப்பட்டு. விசாரணைகளின் பின்னர் புனர்வாழ்வுப் பயிற்சியளிக்கப்பட்டு. விடுதலை செய்யப்பட்டிருப்பதாகவும் விடுதலையாகியிருப்பவர்களில் சிலர் கூறினர்.

"இராணுவத்தினரிடம் சரணடைந்த முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் சுமார் 12 ஆயிரம் பேரையும் நற்பிரஜைகளாக மாற்றி சமூகத்தில் இணைப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்ட புனர்வாழ்வுப் பயிற்சித் திட்டமானது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரையில் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் புனர்வாழ்வு பயிற்சியின் பின்னர் சமூகத்தில் இணைந்து வாழ்கின் றார்கள். இவர்கள் தொடர்பாக எவருமே இதுவரையில் எந்தவிதமான முறைப்பாடுகளையும் செய்ததில்லை. மனித உரிமை அமைப்புக்களும் சரி. தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட அரசியல் கட்சிகளும் சரி. ஐக்கிய நாடுகளோ அல்லது சர்வ தேச நாடுகளோ இதுபற்றி எந்த விதமான குறைகளையும் அல்லது. முறைப்பாடுகளையும் முன்வைக்கவில்லை. இதன் மூலம் முன்னாள் விடுதலைப்புலிகளுக்கான. இந்த புனர்வாழ்வுப் பயிற்சித் திட்டமா னது பயனுள்ளது. முக்கியமானது என்பது நிரூபணமாகியுள்ளது" என்று இந்த வைபவத்தில் உரையாற்றிய மனித வள அமைச்சர் டியு குணசேகர தெரிவித்தார். (செ-11)

## அமைச்சர் பீரிஸ்...

அமைச்சர் பீரிஸ் அரசின் சார்பில் இந்த தெளிவுப்படுத்தலை மேற்கொண்டுள்ளார்.

அமுல்படுத்தப்பட்டு வரும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் முன்னேற்றங்கள் தொடர்பான ஆய்வு அறிக்கையை ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க இந்த சந்திப்பின்போது இராஜதந்திரிகளுக்கு வழங்கியதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பீரிஸ்,

வடக்கு. வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் எதிர்க் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் நடைபெறவில்லை எனவும் அரிதாக சில இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளதாகவும் அவை பாரிய வன்முறைச் சம்பவங்கள் அல்ல எனவும் கூறினார்.

விருப்பு வாக்குகளை பெறுவதற் கான ஆளும் கட்சியின் வேட்பாளர்களுக்கு இடையில் ஏற்படும் பொதுவான சம்பவங்கள் தொடர் பாகவே முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எதிர்க்கட்சிகள் தீவிரமான பிரசாரங்களில் ஈடுபடாததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

தேர்தலில் அரசாங்கத்தின் அணுகுமுறையானது வெளிப்படையாகவும் தெளிவானதுமாக உள்ளது.

கடந்த முறை நடத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல் போல் இன்றி. இம்முறை தேர்தல் ஆணையாளர் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை தேர்தலை கண்காணிக்க அழைத்துள்ளார்.

இந்தியாவில் இருந்து 5 பேரும். பாகிஸ்தானில் இருந்து 5 பேரும். பங்களாதேஷில் இருந்து 3 பேரும். நேபாளம். மாலைதீவுகளில் இருந்து தலா இரண்டு பேரும். ஆப்கானிஸ்தான் மற்றும் பூட்டான் நாடுகளில் இருந்து தலா ஒருவரும் தேர்தல் கண்காணிப்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தெற்காசிய நாடுகளை கொண்ட இந்த வெளிநாட்டு கண்காணிப்பாளர் குழுவின் தலைவராக இந்தியாவின் முன்னாள் தேர்தல் ஆணையாளர் என்.கோபாலசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை பொதுநலவாய நாடுகளில் இருந்து கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (செ-11)

## இரகசிய தடுப்பு முகாம்களா? ...

கோத்தபாய ராஜபகஷ.

"எங்கே அந்த இரகசியத் தடுப்பு முகாம்கள் இருக்கின்றன? இந்த நாடு பெரிய பூமியல்ல. யாருக்கு வேண் டுமானாலும் தேடிப்பார்க்க முடியும். தெரிந்தவர்கள் இருப்பார்களா யின் அவ்வாறான முகாம்கள் இருக்கும் இடங்களை கூறுங்கள். எமக்கும் தேடிப்பார்க்க முடியும். நவநீதம்பிள்ளை அம்மையாரும் இந்த கதையைக் கூறினார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களுடன் படையினரிடம் சரணடைந்த 12 ஆயிரம் பேர் வரையானோருக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்தோம். தடுப்பு முகாம்களில் இருந்த 4 ஆயிரம் பேரை விடுதலை செய்தோம். இவ்வாறு செய்த நாங்கள் எதற்காக நபர்களை ஒளித்து வைத்திருக்க வேண்டும்?" என்று குறிப்பிட்டுள்ளார்.

நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணத்தின் நோக்கம் தொடர்பில் என்ன நினைக்கிறீர்கள் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு.

"நவநீதம்பிள்ளையாக இருந்தாலும் சரி. வேறு யாராக இருந்தாலும் சரி இலங்கையின் உண்மை நிலைவரத்தை அறியாமல். புலம்பெயர்ந்தோர் மற்றும் சனல் 4 ஆகியன கூறுபவற்றை அடிப்படையாகக் கொண்டே சர்வதேச அரங்கில் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தவறான கருத்துகளை முன்வைத் திருந்தது. எனவே. ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வந்து உண்மை நிலை வரத்தை நேரடியாகவே பார்வையிட்டது நல்லது" என்று பதிலளித்துள்ளார்.

"சுதந்திர சதுக்கத்தில் காட்சிப் படுத்தப்பட்டுள்ள பௌத்த கொடிக்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் எதிர்ப்பை வெளியிடுவதற்கு எது காரணமாக அமைந்தது?" என்ற கேள்விக்கு.

"பௌத்த கொடிக்கு மட்டுமல்ல. சுதந்திர சதுக்கத்தில் இருக்கும் இந்த நாட்டின் முதலாவது பிரதமர் டி.எஸ் சேனநாயக்கவின் உருவச் சிலைக்கும் அவர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

"இந்த உயர்ந்த தடித்த மனிதரின் உருவச் சிலை என்னவென்று ஜனாதிபதியுடன் நடந்திய பேச்சின்போது அவர் கேட்டுள்ளார். அவர் எமது நாட்டின் முதலாவது பிரதமர் என்று ஜனாதிபதி அதற்கு பதிலளித்துள்ளார்.

"இது சிங்கள இனத்தை மட்டும் பிரதிபலிப்பதால் உருவச்சிலை அவ்விடத்துக்கு பொருத்தமில்லை என்று" நவநீதம்பிள்ளை அம்மையார் கூறியுள்ளார்.

அரசியல் நிலைப்பாடுகள் என்னவாக இருந்தாலும். இந்த நாட்டின் முதலாவது பிரதமரின் உருவச் சிலை தொடர்பில் கேள்வி எழுப்புவதற்கு அவருக்கு இருக்கும் அதிகாரம் என்ன? வேறு நாடுகளுக்குச் சென்று அந்நாட்டின் தலைவர்கள் தொடர்பில் இவ்வாறு கேட்க முடியுமா? பௌத்த கொடி விவகாரம் இதுதான்.

பௌத்த மதத்தை பாதுகாப்பதற்கு அரசு அரசமைப்பில் உறுதி பூண்டுள்ளது. எனவே. அது தொடர்பில் அவருக்கு கேட்க முடியாது" என்றும் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

நாடு ஏதேச்சாதிகாரத்தை நோக்கிப் பயணிக்கின்றது என்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நவநீதம்பிள்ளை முன்வைத்த குற்றச்சாட்டு குறித்தும் கோத்தபாய ராஜபக்ஷ கருத்து வெளியிட்டுள்ளார்.

"அவர் இதன்மூலம் எதை அர்த்தப்படுத்தினார் என்று தெரியவில்லை. தேர்தல் மூலமே இந்த நாட்டில் அரசு ஸ்தாபிக்கப்படுகின்றது. ஜனாதிபதி. மாகாணசபை. பிரதேச சபை என அனைத்து விதமான தேர்தல்களும் உரிய நேர்த்தில் நடைபெறுகின்றன. இவ்வாறானதொரு நாட்டை ஏதேச்சாதிகாரம் என குறிப்பிட்டு அந்த வசனத்துக்கு அவர் புதிய வரைவிலக்கணம் வழங்குகின்றாரோ தெரியவில்லை" என கோத்தபாய ராஜபக்ஷ இச்செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளார்.(செ-11)

## இலங்கைக்கு மீண்டும் ...

ஐநாவின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் 24வது மாநாட்டின் நேற்றைய ஆரம்ப வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"இலங்கையில் புனர்நிர்மாணம். நல்லிணக்கம். போரின் பின்னரான பொறுப்புக்கூறல் ஆகியவற்றுடன். மத சகிப்பின்மை. ஆளுகையும் சட்டத்தின் ஆட்சியும் போன்ற பரந்துபட்ட மனித உரிமைகள் நிலைவரம் ஆகியவற்றிலும் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்து நானறிவதற்கு ஏதுவாக எனது அண்மைய விஜயத்துக்கு ஏற்பாடு செய்து உதவியமைக்காக நான் இலங்கை அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

இந்த மாநாட்டில், பின்னர் நடக்கவிருக்கும் மற்றுமொரு நிகழ்வில் இலங்கை குறித்த எனது அவதானங்களை நான் அறிக்கையிடுவேன். ஆனால். எனது விஜயத்தின் போது என்னைச் சந்தித்த மனித உரிமைக் காவலர்கள். செய்தியாளர்கள் மற்றும் சமூகங்கள் எதிர்கொண்டிருக்கக் கூடிய அடக்குமுறை. துன்புறுத்தல் மற்றும் தாக்குதல் குறித்து நான் எனது உடனடிக் கவலையையும் பின்விளைவுகளையும் இங்கு வலியுறுத்த விழைகிறேன்." என்று ஐநாவின் மனித உரிமைகள் ஆணையர் நவிபிள்ளை அவர்கள் கூறியுள்ளார்.

இலங்கைக்கான அவரது விஜயத்தின் போது அவர் பலவிதமான விமர்சனங்களை இலங்கையின் கடும்போக்கு தேசியவாதிகளிடம் இருந்து எதிர்கொண்டார்.

சில அமைச்சரவை உறுப்பினர்கள் கூட அவருக்கு எதிராக அவதூறாக கருத்து வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில் அவரைச் சந்தித்த சில மாற்றுக் கருத்தாளர்கள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஏனையோர் மிரட்டப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாயின.

இவை குறித்து தனது இலங்கை விஜயத்தின் முடிவில் கூட நவிபிள்ளை அவர்கள் கண்டனம் தெரிவித்திருந்தார்.

தற்போது அது குறித்து அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

"ஐநாவுடனான ஒத்துழைப்பு, அதன் பிரதிநிதிகள், மற்றும் மனித உரிமைகளுக்கான பொறிமுறைகள்" குறித்த ஐநா தலைமைச் செயலரின் அறிக்கை இந்த மாநாட்டின் போது சமர்ப்பிக்கப்படும் என்றும். 2012 ஆம் ஆண்டு ஜூன் 16 ஆம் திகதி முதல் 2013 -ம் ஆண்டு ஜூன் 15-ம் திகதி வரையிலான காலப்பகுதியில் ஐநாவுடன் ஒத்துழைத்ததற்காக அடக்குமுறைகளுக்கு உள்ளானார்கள். மிரட்டலுக்கு உள்ளானவர்கள் குறித்த விடயங்களும் அதில் இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையே இலங்கையில் ஐநா மனித உரிமைகள் ஆணையரைச் சந்தித்ததற்காக மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள். செய்தியாளர்கள். மற்றும் சமூகத்தினர் மிரட்டப்பட்டதாகக் கூறி அவர்களது பாதுகாப்பு குறித்து நவிபிள்ளை அவர்கள் தனது உடனடிக் கவலையை வெளியிட்டமை குறித்து ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தரப் தூதுவர் ஆரியசிங்க பதிலளித்துள்ளார்.

ஆணையரின் விஜயத்தின் போதான சந்திப்புகள் ஐநாவின் கொழும்பு அலுவலகத்தால் சுயாதீனமாக ஏற்பாடு செய்யப்பட்டன என்று கூறியுள்ள அவர்,

இலங்கை அரசாங்கம். மனித உரிமை பாதுகாவலர்களுக்கான பாதுகாப்பை வழங்க அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும். ஆகவே அப்படியான மிரட்டல். அல்லது தாக்குதல் சம்பவங்கள் ஏதாவது நடந்திருந்தால் அவை குறித்து குறிப்பான தகவல்களை ஐநா மனித உரிமைகள் ஆணையம் தந்து உதவ வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.(செ-11)

ACCA
THE GLOBAL BODY FOR PROFESSIONAL ACCOUNTANTS
Association of Chartered Certified Accountants
IPS
க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
புலமைப்பரிசில் திட்டம் — 2013
மேற்படி புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான திகதி 12.09.2013 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: பதிவாளர், த.பெ.இல. (P.O. Box No.) :18, யாழ்ப்பாணம்.
(3913)

வடமராட்சியில்....
மிக இலகுவான தமிழ் விளக்கத்துடன்
Special English Class
By: Mr. Jothy
2 ஆவது பிரிவு ஆரம்பம்
12.09.2013 வியாழன்
Spoken English, Grammar, Vocabulary ஆகிய அனைத்துத் திறன்களையும் கொண்ட முழுநிறைவான கற்கைநெறி.
பருத்தித்துறையில் - 5.00 P.M
Oxford English Academy
P.K Lane, Point Pedro.
நெல்லியடியில் - 4.00P.M
Everest Academy
Vathiry, Karaveddy. (அஜந்தாஸ் ஸ்ருடியோ ஒழுங்கை)

விண்ணப்பம் கோரல்
இலங்கை பட்டயக்கணக்காளர் பரீட்சை
Institute of Chartered Accountants – Sri Lanka

இலங்கை பட்டயக்கணக்காளர் சபை பரீட்சையானது அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளர்களை உருவாக்குவதுடன் அதி திறமை வாய்ந்த கணக்காளர்களையும் உருவாக்குகின்றது. இக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

K-AIMS நிறுவனமானது 2009ம் ஆண்டு முதற்தரமான கற்கை நெறியை மாணவர்களிற்கு பெற்றுத்தரும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகும்.

நாங்கள் அங்கீகரிக்கப்பட்ட கல்வி மூலவளங்களுடனும் அனுபவமும், திறமையும் வாய்ந்த விரிவுரையாளர்களுடனும் அதிவிசேடமான கற்பித்தல் முறையை வழங்கி வருகின்றோம்.

உங்கள் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்துடன் கூடிய விண்ணப்ப படிவத்தை 21st September 2013 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

- Foundation Level / CAB I- September 25th முதல்
- Intermediate Level/CAB II- October 14th முதல்

K-AIMS JAFFNA
3-1/2, Sirambiyadi Lane [Stanley Road]
Jaffna
T: 0773 722 104 / 021 221 9422
W: www.k-aims.com
K-AIMS
We Make You Progress Everyday..

# ஐ.நா உறுப்பு நாடு...

தொடர்பிலான ஐக்கிய நாடுகள் அமைப்பின் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக் கொள்ளுமாறு அமெரிக்கா இலங்கைக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 24-ம் அமர்வுகளில் நேற்றுப் பங்கேறற பேரவையின் அமெரிக்க வதிவிடப் பிரதிநிதி எய்லீன் சம்பர்லெய்ன் டொனாஹ் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர நவநீதம்பிள்ளையின் அண்மைய இலங்கை விஜயத்தை வரவேற்பதாகத் தெரிவித்துள்ளார். மனித உரிமை, ஜனநாயகம், நீதி போன்ற பல்வேறு விடயங்கள் நவநீதம் பிள்ளை நேரில் பார்வையிட சாத்தியம் கிட்டியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயத்தை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. நவநீதம்பிள்ளையை சந்தித்தவர்களை அச்சுறுத்தியதாக சுமத்திய குற்றச்சாட்டுக்கள் குறித்து கவனம் செலுத்துவதாக ஐரோப்பிய ஒன்றியம தெரிவித்துள்ளது.

இதேவேளை, நவநீதம்பிள்ளையை இலங்கையில் சந்தித்தவரகளுக்கு அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் குறித்து ஜெர்மனியும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

நவநீதம்பிள்ளையை சந்தித்தவர்களுக்கு நெருக்கடி ஏற்படுத்தப்பட்டமை குறித்து ஒஸ்ட்ரியாவும்கவலை வெளியிட்டுள்ளது. (செ-11)

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the Ministry of Telecommunication & Information Technology
MPCS Building, 127, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில் நுட்ப பூங்காவில் கீழ்வரும் கற்கை நெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
August/September Batch
★ Dip.in PC Application & Office Management
★ Dip.in Desktop Publishing
★ Internet & e-mail (Workshop)
விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம - 27-09-13
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 28-09-13
CENTRE FOR INFORMATION TECHNOLOGY
-Executive Officer-
(சி-4673)

மாதம் 250000/- வருமானம், உணவு, இருப்பிடம், ரிக்கெற் இலவசம்
முற்றிலும் புதிய வரவு...
6 மாதத்திற்கு ஒரு தடவை இலவசமாக ஊர்வந்து போகலாம்.
2 வருட விசா, நீடிக்கப்படக் கூடிய உத்தரவாதம்.
வாரத்தில் 4 பேர் மட்டுமே இணைக்கப்படுவர்.
டென்மார்க்கில் படிக்க, உழைக்க அரிய வாய்ப்பு.
(காலை 8.30 - மாலை 6.30 வரை)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(C-4680)

A/L தகுதி பின்னர்
HND கல்வியினை
அனுபவமிக்க விரிவுரையாளர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்

BTEC edexcel HND
in Computing & System Development
in Business Management
ஒவ்வொரு பிரிவிலும் இரு பட்டத் தகைமைகள்
36+ ஆண்டுகள் ஒருங்கிணைந்த விரிவுரை அனுபவம்
நன்மைகள்
- பகுதி நேர அல்லது முழு நேரக்கல்வி
- மறைமுக செலவீனங்கள் இல்லை
- வேலைவாய்ப்புகளுக்கு பரந்த வாயப்புக்கள்
- Diploma in English கற்கை நெறி இலவசம்
Your Career Pathway
HND 18 Months → Top-up Degree 1 Year → Masters 1 Year
Edexcel -UK பதிவுகளுக்கான கட்டணம் ரூபா 40,000 இலவசம்
புதிய பிரிவுகள் 14.09.2013 9:00am
Start with pending A/L Results
ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
Sri Lanka's Largest IT Education Network
ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna
Tel: 021 222 4142 | 077 309 9 308

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.